# 4. கைத்தொழில்

## 4. 1. பொதுவான போக்குகள்

சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள், சீமெந்து, கட்டடப் பொருட்கள், பதனிடப்பட்ட கோதுமை மா, விலங்குத்தீன், வெறியக் குடிவகை, பால் உற்பத்திப் பொருட்கள், மருந்தாக்கற் பொருட்கள், மென்பானங்கள், இரசாயனங்கள் போன்ற உள்நாட்டு சந்தை சார்ந்த கைத்தொழில்களின் உறுதியான செயலாற்றத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் 1998இல் கைத்தொழில் வெளியீடு 1997இன் 10.2 சதவீதம்கொண்ட வளர்ச்சிக்கெதிராக 7.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் கலப்பான செயலாற்றத்தைக் கொண்டிருந்தன. மீன் மற்றும் இறப்பர்ப் பொருட்கள் போன்ற விடயங்கள் உறுதியான வளர்ச்சி வீதங்களைப் பேணிய வேளையில், வைரங்கள், இரத்தினக்கற்கள், ஆபரணங்கள் என்பன ஏற்றுமதியில் வீழ்ச்சியைக் காட்டின. உலக நாடுகளின் தீவிரமான போட்டி காரணமாக ஆண்டின் இறுதிப்பகுதியளவில் அணியும் ஆடைப் பொருட்கள் கைத்தொழிலின் வளர்ச்சிவீதம் மெதுவடைந்தது. தயாரிப்புத் துறையில் 84 சதவீதத்திற்கு வகைகூறிய தொழிற்சாலைக் கைத்தொழில்கள் 1998இன் பொதுவான பொருளாதார வளர்ச்சியின் 28 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. 1998இல் கைத்தொழில் துறையின் இயலளவு 4 சதவீதத்தினால் அதிகரித்தது. 1998இல் முதலீட்டுச் சபையல்லாத் துறையின் தொழிலாளர் உற்பத்தியாக்கம் 4 சதவீதத் தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்காசிய நிதி நெருக்கடி மற்றும் அதனைத் தொடர்ந்து ருசியா, யப்பான் மற்றும சில மத்திய, தென் அமெரிக்க நாடுகள் என்பனவற்றையும் உள்ளடக்கிய பல நாடுகளில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகள் என்பனவற்றின் காரணமாக உலக வர்த்தகம் மூன்றில் இரண்டு பங்கினால் வீழ்ச்சியடைந்த மந்தமான உலக வர்த்தக சூழ்நிலையிலும் கைத்தொழில் துறையில் இந்த வளர்ச்சி எய்தப்பெற்றது. கிழக்காசிய நிதி நெருக்கடியின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட பாரிய நாணய தேய்வுகள், தாழ்ந்த தொழிலாளர் செலவு மற்றும் உலகின் ஏனைய நாடுகளின் மிதமான பணவீக்கம் என்பன உள்நாட்டுக் கைத்தொழிலில் போட்டியினைப் பேணின. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பொருளாதார பின்னடைவானது பதனிடப்பட்ட வைரங்கள், ஆபரணங்கள் மற்றும் மட்பாண்டப் பொருட்கள் என்பனவற்றின் ஏற்றுமதிகளுக்கான கேள்வியை மந்தமடையச் செய்தன. எனினும் உற்பத்திப் பொருட்களின் தரம் மற்றும் உறுதியான வழங்கல் மூலங்கள் என்பனவற்றை எதிர்பார்க்கும் பாரிய கொள்வனவாளர்கள் இலங்கையின் தயாரிப்பாளர்களுடன் தொடர்ந்தும் கொள்வனவுக் கட்டளைகளை மேற்கொண்டமையினால் ஏற்றுமதிசார்ந்த சில முக்கிய கைத்தொழில்கள் தொடர்ந்தும் சிறப்பாகச் செயலாற்றின. கூட்டுமுயற்சிகளின் ஊடாக பாரிய ஏற்றுமதியாளர்கள் பலர் முக்கிய சருவதேச கொள்வனவாளர்களுடன் உறுதியான தொடர்பினைக் கொண்டிருந்தனர். எனினும், போட்டித் தன்மையில் நிலைத்து நிற்பதற்காகவேண்டி கைத்தொழில் முயற்சியாளர்கள் அதியுயர் கழிவுகளை வழங்கவேண்டியிருந்தது.

கைத்தொழில்கள் உயர் தொழில்நுடபத்துக்கான இறை ஊக்குவிப்புக்களையும் உள்ளடக்கி தொடர்ந்துவந்த வரவு செலவுத் திட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகள், முதலீட்டுச் சபையல்லா ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்கள் மற்றும் கடந்த காலத்தின் உயர்ந்த வட்டிவீதங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த வட்டிவீதம் புடவை இறக்குமதிகளின் தாராளமயமாக்கல் என்பன கைத்தொழில் வளர்ச்சியில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தின. உற்பத்தி இயலளவு விரிவடைந்துள்ளதுடன் கைத்தொழில் அடிப்படை பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. மூலதனப் பொருட்களுக்கான தீர்வை அகற்றலினால் நன்மையடைந்து இவ்வாண்டில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 12 சதவீதத்தினால் அதிகரித்து ஏற்கெனவேயுள்ள தொழிற்சாலைகளை மீளமைக்கவும் புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவும் உதவின. உயர் தொழில் நுட்பத்தின்மீதான அதிகரித்த செலவானது பல கைத்தொழில்களில் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்தியுள்ளமையானது சம்பளங்கள் கூலிகள் என்பனவற்றின் மிதமான அதிகரிப்பினை எதிரீடு செய்வதற்கு உதவியுள்ளது.

உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதற்காக வேண்டி புரிந்துணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் வீண் விரையக் குறைப்பு வழிமுறைகள் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றின் ஊடாக பல கைத்தொழிலாளர்கள் உபாய வழிமுறைகளை மேற்கொண்டுள்ளனர். இலங்கை ரூபாவின் மிதமான பெறுமானக் குறைப்பு, உள்நாட்டு பணவீக்க வீதத்தின் குறைப்பு மற்றும் வங்கிக் கடன் பெறுகைகளின் செலவின் சார்பு ரீதியான குறைப்பு என்பனவும் வெளிநாட்டுப் போட்டித் தன்மையினை மேம்படுத்துவற்கு உதவியுள்ளன. தயாரிப்புக் கைத்தொழில்களுக்கான மூலப்பொருட்களில் கணிசமான அளவொன்று கிழக்காசிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றமையினால் கிழக்காசிய நாணயங்கள் சிலவற்றின் பாரிய மதிப்பிறக்கமானது இடைநிலைப் பொருட்களின் செலவினைக் குறைப்பதற்கு உதவியுள்ளது. தயாரிப்புத்துறையில் தொழிலாளர் உறவு முறையில் காணப்பட்ட மேம்பாடானது 1998இல் காணப்பட்ட இன்னுமொரு சாதகமான




வரைபடம் 4.1
கைத்தொழில் உற்பத்திகளின் வளர்ச்சியும் உள்ளமைப்பும்

வரைபடம் 4.1.1
கைத்தொழில் வெளியீடுகளின் வளர்ச்சி

வரைபடம் 4.1.2
கைத்தொழில் உற்பத்தியின் உள்ளமைப்பு - 1998

அபிவிருத்தியாகும். மின்வலு, தொலைத் தொடர்பு மற்றும் துறைமுக வசதிகள் போன்ற அடிப்படை கைத்தொழில் உட்கட்டமைப்பு வசதிகளில் காணப்பட்ட கணிசமான மேம்பாடுகள் மற்றும் கைத்தொழில் பூங்கா நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் என்பன கைத்தொழில் நடவடிக்கைகளில் புதியவர்களின் நுழைவினை ஊக்குவித்தன. முதலீட்டுச் சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பனவற்றின்கீழ் பதிவு செய்யப்பட்ட 201 பாரிய தொழில் முயற்சிகள் இவ்வாண்டில் வர்த்தக உற்பத்தியை ஆரம்பித்தன. இதேவேளையில் முகாமைத்துவப் பிரச்சினைகள் மற்றும் பலதரப்பட்ட இடர்கள் என்பனவற்றின் காரணமாக 37 தொழில் முயற்சிகள் தமது வர்த்தகத் தொழிற் பாட்டினை நிறுத்திக்கொண்டன. மனிதவள தேர்ச்சிகள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றை காலத்துக்கேற்ப தரமுயர்த்துவதற்கு மேலதிகமாக பாதைகள் மற்றும் போக்குவரத்து முறைகள், துறைமுக வசதிகள் மற்றும் தொடர்புசாதன வலையமைப்பு மற்றும் வலு என்பனவற்றின் மேலதிக அபிவிருத்தியானது இந்தத் துறையின் விரைந்த வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகும். உழைப்புக்கான கேள்விக்கும் வழங்கலுக்கும் இடையில் பொருத்தமின்மை மற்றும் தொழிற்சந்தையின் நெகிழ்ச்சியற்ற தன்மை என்பன விரைந்த கைத்தொழில் விரிவாக்கத்திற்கு தடையாக இருந்துள்ளன.

## 4.2. உற்பத்தி

இலங்கை மத்திய வங்கியின் 1998இன் கைத்தொழில் உற்பத்தி அளவீடு (இது 475 முதலீட்டுச் சபையல்லா கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது), அரசதுறை தொழில் முயற்சிகளின் கைத்தொழில் உற்பத்தி மற்றும் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்கள் ஏற்றுமதி தரவுகள் என்பனவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. 1998இல் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சி 7.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அளவீட்டின்படி நடைமுறை விலைகளில் பொதுவான கைத்தொழில் வெளியீடு 14 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது தொழிற்சாலைக் கைத்தொழில்களுக்கான 6 சதவீத உட்கிடை விலைச் சுருக்கியொன்றினைத் தருகின்றது. இது கைத்தொழில் துறையில் உற்பத்திச் செலவின் அதிகரிப்பு வீதத்தினைப் பிரதிபலித்தது. 1998இன் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சியானது முக்கியமாக உணவு, குடிபானம், புகையிலை, இரசாயனம், இறப்பர், பெற்றோலியம் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள், புடவை, அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள்




வரைபடம் 4.2
கைத்தொழில் உற்பத்திப் பெறுமதி
(1990 நிலையான விலைகளில்)

**அட்டவணை 4.1**
**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி**
**(1990 நிலையான விலைகளில்)**

| வகை | ரூபா மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1994 | 1995 | 1996 | 1997 | 1998(அ) | 1997 | 1998(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 30,445 | 33,641 | 35,908 | 37,146 | 40,729 | 3.4 | 9.6 |
| உணவு, ஏனையவை | 17,526 | 18,936 | 20,314 | 21,343 | 23,787 | 5.1 | 11.5 |
| வெறியக் குடிவகை | 2,251 | 2,630 | 3,027 | 2,961 | 3,458 | -2.2 | 16.8 |
| குடிபானம் | 5,023 | 5,961 | 6,104 | 7,032 | 7,686 | 15.2 | 9.3 |
| புகையிலை உற்பத்திகள் | 5,645 | 6,114 | 6,463 | 5,810 | 5,798 | -10.1 | -0.2 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 48,333 | 55,480 | 58,332 | 69,269 | 72,391 | 18.7 | 4.5 |
| அணியும் ஆடைகள் | 40,353 | 46,702 | 49,292 | 59,280 | 62,050 | 20.3 | 4.7 |
| புடவைகள் | 5,509 | 6,202 | 6,299 | 6,926 | 7,226 | 10.0 | 4.3 |
| தோல் | 2,471 | 2,576 | 2,741 | 3,063 | 3,115 | 11.7 | 1.7 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,085 | 1,243 | 1,321 | 1,334 | 1,378 | 1.0 | 3.3 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 3,565 | 3,508 | 3,550 | 3,561 | 3,446 | 0.3 | -3.2 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 25,838 | 27,543 | 31,135 | 32,582 | 36,841 | 4.6 | 13.1 |
| இரசாயம், தீந்தை, வளமாக்கி | 2,173 | 2,735 | 3,091 | 3,584 | 4,049 | 15.9 | 13.0 |
| இறப்பர் | 3,091 | 3,956 | 4,660 | 5,539 | 6,004 | 18.9 | 8.4 |
| பிளாத்திக்கு மற்றும் பிவிசி | 2,284 | 2,754 | 3,113 | 3,584 | 3,874 | 15.1 | 8.1 |
| மருந்தாக்கல் பொருட்கள், சுத்தமாக்கிகள், ஏனையவை | 6,072 | 6,885 | 7,784 | 8,797 | 9,853 | 13.0 | 12.0 |
| பெற்றோலியம் | 12,218 | 11,213 | 12,487 | 11,078 | 13,061 | -11.3 | 17.9 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 11,643 | 12,516 | 13,360 | 13,914 | 14,629 | 4.1 | 5.1 |
| வைரம் பதனிடல் | 4,445 | 4,630 | 4,542 | 4,453 | 4,059 | -2.0 | -8.8 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 1,688 | 1,867 | 2,138 | 2,226 | 2,302 | 4.1 | 3.4 |
| சீமெந்து | 3,039 | 3,316 | 3,607 | 3,896 | 4,628 | 8.0 | 18.8 |
| கட்டடப் பொருட்களும் ஏனையவையும் | 2,471 | 2,703 | 3,073 | 3,339 | 3,640 | 8.7 | 9.0 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,568 | 1,377 | 1,636 | 1,671 | 1,856 | 2.1 | 11.1 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 5,931 | 6,139 | 6,252 | 7,437 | 8,235 | 19.0 | 10.7 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 2,617 | 3,005 | 3,443 | 3,904 | 4,093 | 13.4 | 4.8 |
| மொத்தம் | 131,025 | 144,452 | 154,937 | 170,818 | 183,598 | 10.2 | 7.5 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கை முதலீட்டுச் சபை.

வகையிலிருந்தே பெறப்பட்டது. இந்தவகை உற்பத்திப் பொருட்கள் கைத்தொழில் வெளியீட்டு வளர்ச்சியின் 86 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தன.

## தனியார் துறைக் கைத்தொழில்கள்

தனியார்துறைக் கைத்தொழில் வெளியீடு முன்னைய ஆண்டின் 12.1 சதவீத அதிகரிப்பிலிருந்து 6.9 சதவீத வளர்ச்சியையே கொண்டிருந்ததுடன் 1998இல் கைத்தொழில் உற்பத்தியின் 93 சதவீதத்திற்கு தனியார்துறை வகைகூறியது. முன்னைய ஆண்டின் 19 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1998இல் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் வெளியீட்டு வளர்ச்சி 6.4 சதவீதமென மதிப்பிடப்பட்டுள்ளது. உண்ணாட்டு சந்தை சார்ந்த முதலீட்டுச் சபையல்லாக் கைத்தொழில்கள் 1997இன் 5.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.5 சதவீதத்தினால் விரிவடைந்தன. தனியார்துறை கைத்தொழில்களின் விரிவானது உணவு, குடிபானம், புகையிலை, இரசாயனங்கள், இறப்பர், பெற்றோலியம் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள், புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் மற்றும்

**வரைபடம் 4.3**
**தனியார்துறை கைத்தொழில் அளவுச் சுட்டெண்**
**(% மாற்றம்)**



அட்டவணை 4.2
தனியார்துறைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

1990=100

| வகை | சுட்டெண் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1994 | 1995 | 1996 | 1997 | 1998(அ) | 1997 | 1998(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 140 | 155 | 166 | 172 | 188 | 3.4 | 9.7 |
| உணவு, ஏனையவை | 145 | 155 | 166 | 176 | 196 | 5.9 | 11.4 |
| வெறியக் குடிவகை | 137 | 160 | 183 | 177 | 207 | -3.3 | 16.8 |
| குடிபானம் | 148 | 175 | 180 | 207 | 226 | 15.2 | 9.3 |
| புகையிலை உற்பத்திகள் | 118 | 128 | 135 | 121 | 121 | -10.1 | -0.2 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 179 | 206 | 217 | 258 | 269 | 18.7 | 4.5 |
| அணியும் ஆடைகள் | 193 | 223 | 235 | 283 | 297 | 20.3 | 4.7 |
| புடவைகள் | 151 | 171 | 174 | 191 | 199 | 10.0 | 4.3 |
| தோல் | 156 | 162 | 172 | 193 | 196 | 11.7 | 1.7 |
| 3. மர, மர உற்பத்திகள் | 149 | 170 | 165 | 165 | 163 | -0.3 | -1.1 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 263 | 266 | 279 | 287 | 289 | 2.8 | 0.8 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 159 | 196 | 224 | 257 | 286 | 14.7 | 11.1 |
| இரசாயனம், தீந்தை, வளமாக்கி | 129 | 162 | 183 | 212 | 240 | 15.9 | 13.0 |
| இறப்பர் | 141 | 181 | 213 | 253 | 274 | 18.9 | 8.4 |
| பிளாத்திக்கு மற்றும் பிவிசி | 134 | 161 | 182 | 210 | 227 | 15.1 | 8.1 |
| மருந்தாக்கல் பொருட்கள், சுத்தமாக்கிகள், ஏனையவை | 166 | 204 | 235 | 265 | 297 | 12.8 | 12.0 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 212 | 228 | 243 | 254 | 267 | 4.5 | 5.0 |
| வைரம் பதனிடல் | 235 | 280 | 270 | 260 | 237 | -3.7 | -8.8 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 143 | 158 | 181 | 189 | 195 | 4.1 | 3.4 |
| சீமெந்து | 182 | 199 | 212 | 232 | 276 | 9.4 | 18.8 |
| கட்டடப் பொருட்களும் ஏனையவையும் | 164 | 180 | 204 | 221 | 241 | 8.2 | 9.0 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 266 | 305 | 351 | 359 | 399 | 2.3 | 11.1 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 141 | 147 | 150 | 178 | 197 | 18.7 | 10.7 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 168 | 193 | 221 | 250 | 262 | 13.1 | 4.8 |
| மொத்தம் | 172 | 192 | 205 | 230 | 246 | 12.1 | 6.9 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கை முதலீட்டுச் சபை.

உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் என்பனவற்றில் காணப்பட்டது. முதலீட்டுச் சபையல்லாத்துறையில் தொழில்நிலை இவ்வாண்டில் 7.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இத்துறையின் இயலளவுப் பயன்பாடு முன்னைய ஆண்டினைப் போலவே 84 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில் இலாபத்தன்மை 1997இன் 14.9 சதவீதத்திலிருந்து 1998இல் 12.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## புடவைகள் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள்

1998இல் புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் வகையில் வளர்ச்சி 4.5 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டின் 18.7 சதவீதத்திலிருந்தான கணிசமான வீழ்ச்சியொன்றாகும். இந்த வகையில் கைத்தொழில்கள் 1998இல் தனியார்துறை கைத்தொழில் உற்பத்தியின் 24.4 சதவீதம் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன. அனுமதிப் பங்கு விடயங்கள் சிலவற்றின் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான கப்பலேற்றல்களில் அனுமதிப்பங்குக்கு மேலான கப்பலேற்றல்கள் அனுமதிப்பங்கு நிருவாகத்துக்கு கவலைதரக்கூடிய விடயமாகக் காணப்பட்டதோடு சில தயாரிப்பாளர்கள் தமது ஏற்றுமதிகளை 1998வரை பிற்போட வேண்டியிருந்தது. எனவே, ஆண்டின் இறுதியில் கையிருப்புக்களின் சேர்ப்பு ஒன்று காணப்பட்டது. முதலீட்டுச்சபை நிறுவனங்களின் ஆண்டு இறுதி கையிருப்பு 12 சதவீதத்தினால் அதிகரித்தது. முதலீட்டுச் சபை அணியும் ஆடைகள் புடவைகள் கைத்தொழில்கள் இவ்வாண்டில் 4.6 சதவீத மிதமான வெளியீட்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. அணியும் ஆடைகள் மற்றும் புடவைகளுக்கான அனுமதிப்பங்குகளின் கிடைப்பனவு 1998இல் 4.5 சதவீதத்தினால் அதிகரித்தது. அனுமதிப்பங்கின் பயன்பாட்டு வீதம் 1997இன் 73.6 சதவீதத்திலிருந்து 1998இல் 74.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. இறக்குமதி செய்யப்பட்ட புடவைகளின் மீதான தீர்வைகள் இல்லாதொழிக்கப்பட்டமையானது

சுங்க தாமதங்களையும் உள்நாட்டுச் சந்தையில் புடவைகளின் விலை அதிகரிப்பினையும் குறைப்பதற்கு உதவின. எனினும், புடவைக் கைத்தொழிலை திறந்த சந்தைப் போட்டிக்குத் தள்ளியது. சில தொழிற்சாலைகளின் பிரச்சினைகள் சிக்கலடைந்து அவற்றின் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு வழிவகுத்ததுடன் ஏறத்தாழ 3,000 ஊழியர்களை (லேடெக்ஸ் மற்றும் பூகொட) குறைக்க வேண்டியிருந்தது. எனினும், இவ்வூழியர்களுக்கு சம்பளம் தொடர்ந்தும் வழங்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகளின் ஏற்றுமதிகள் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தேவைப்பாடுகளின் 2.1 சதவீதத்திற்கும், அணியும் ஆடைகள் புடவைகள் என்பன 1998இன் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 60 சதவீதத்திற்கும் வகைகூறின. ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான இலங்கையின் அணியும் ஆடைகள் ஏற்றுமதிகள் 1997இன் 322 மில்லியன் சதுர மீற்றர் சம அளவுகளிலிருந்து 1998இல் 333 மில்லியன் சதுர மீற்றர் சம அளவுகளுக்கு 3.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இவற்றில் 77 சதவீதமானவை அனுமதிப்பங்குகளின் கீழானவையாகும். இந்த ஏற்றுமதிகளின் பெறுமதி 1997இன் ஐ.அ.டொலர்கள் 1,204 மில்லியனிலிருந்து 1998இல் ஐ.அ.டொலர்கள் 1,309 மில்லியனுக்கு 8.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 5.5 சதவீத விலை இலாபம் காணப்பட்டது. அனைத்து நாடுகளிலிருந்தும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான அணியும் ஆடைகளின் இறக்குமதி விலைகளின் பொதுவான வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது சாதகமான அபிவிருத்தியொன்றாகும். அதிகரித்த கூட்டிய பெறுமதியுடைய விடயங்களுக்கு தயாரிப்பாளர்கள் நகர்வதுடன் அதிகரித்த போட்டியினைக் கொண்ட சந்தைச் சூழலிலும் இலங்கையின் அணியும் ஆடைகள் அமெரிக்காவில் உயர் விலைகளைப் பெற்றுக்கொண்டன. ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான ஏனைய புடவை ஏற்றுமதிகள் 1997இன் 157 சதுர மீற்றர் சம அளவிலிருந்து 1998இல் 195 சதுர மீற்றர் சம அளவிற்கு அதிகரித்து 24 சதவீத வளர்ச்சியினைக் குறித்துக்காட்டின. அனுமதிப்பங்கு அல்லாத விடயங்களின் ஏற்றுமதிகள் 25 சதவீதத்தினால் அதிகரித்தன.

ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான அனுமதிப் பங்கின் 3.2 சதவீத அதிகரிப்பு, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அனுமதிப்பங்கின் 13.3 சதவீத அதிகரிப்பு கனடிய அனுமதிப்பங்கின் 7.8 சதவீத அதிகரிப்பு என்பனவற்றில் 1998இல் அனுமதிப் பங்குகளின் கிடைப்பனவு 4.5 சதவீதத்தினால் அதிகரித்தது. மேற்சட்டைகள் மற்றும் மகளிர் மேற்சட்டைகள், இரவில் அணியும் ஆடைகள் உள்ளாடைகள், சடைத்துணி மற்றும் மென்மயிர் துவாய்கள், சரிகைகள், துவார பின்னல் கொண்ட சீத்தைகள் ஆகியவற்றின் அமெரிக்காவுக்கான அனுமதிப் பங்குகள் இவ்வாண்டில் கணிசமாக அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் ஆண்களினதும் சிறுவர்களினதும் பின்னல் மேற்சட்டைகள் தவிர்ந்த ஏனையவற்றுக்கான அனுமதிப் பங்குகளின் கிடைப்பனவு 1998இல் அதிகரித்தது. ஆண்களினதும் சிறுவர்களினதும் பின்னல் மேற்சட்டை வகையின் அனுமதிப்பங்குக் குறைப்பானது இந்த வகையின் பயன்பாட்டு வீதம் 50 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டமையின் காரணமாக அணியும் ஆடைகள் ஏற்றுமதியில் கணிசமான பாதிப்பு எதனையும் ஏற்படுத்தவில்லை. மேற்சட்டைகள், புறச்சட்டைகளும் மழை அங்கிகளும், உள்ளங்கிகள் துயிலுடைகள், குளியலங்கிகள், படுக்கை விரிப்புக்கள் என்பனவற்றிற்கு கனடிய சந்தையில் அதிகரித்த அனுமதிப் பங்குகள் காணப்பட்டன. எனினும், மகளிருக்கும் ஆடவருக்குமான மேற்சட்டைகள், பெண்களின் நெடுஞ்சட்டைகள் மற்றும் காற்சட்டைகள் போன்ற உயர்கூட்டிய பெறுமதியினைக்கொண்ட விடயங்கள் தொடர்பாபான அனுமதிப்பங்கு 1998இல் போதுமான அதிகரிப்பைக் காட்டவில்லை.

முன்னைய ஆண்டினைப் போலவே, அனுமதிப் பங்கின் பயன்பாட்டு வீதம் குறைந்த கூட்டிய பெறுமதியைக்கொண்ட விடயங்களிலிருந்து கூடிய கூட்டிய பெறுமதியினைக்கொண்ட விடயங்களுக்கு நகர்ந்தது. மேற்சட்டைகளின் சிலவகைகள், ஆண்களினதும் சிறுவர்களினதும் சில உடைவகைகள் மகளிரினதும் ஆடவரினதும் மேற்சட்டைகள் ஆண்களினதும் பெண்களினதும் பின்னப்பட்ட மேற்சட்டைகள் ஆண்களினதும் சிறுவர்களினதும் பின்னப்படாத மேற்சட்டைகள், காற்சட்டைகள், நெடுஞ்சட்டைகள் என்பவற்றுக்கான ஐக்கிய அமெரிக்க சந்தையின் அனுமதிப்பங்குகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. கனடிய சந்தையில் அனுமதிப்பங்கு விடயங்களான காற்சட்டைகள், பொது ஆடைகள் மற்றும் அரைக் காற்சட்டை என்பனவற்றின் பயன்பாட்டு வீதம் உயர்வானதாகக் காணப்பட்டது. 1998இல் அனுமதிப்பங்கு வகைகளான பெண்களின் அரைப்பாவாடை இரவு அங்கிகள், உள்ளாடைகள், சாப்பு துவாய்கள், காற்சட்டைகள் என்பனவற்றிற்கு பாரிய கேள்வி காணப்பட்டது. தலையணை உறைகள், துப்புரவு செய்யும் துவாய்கள், பின்னப்படாத ஆண் பெண் மேற்சட்டைகள் போன்ற குறைந்த கூட்டிய பெறுமதியுடைய வகைகளின் பயன்பாட்டு வீதம் தாழ்வாகக் காணப்பட்டது. தயாரிப்பாளர் உயர் கூட்டிய பெறுமதியுடைய விடயங்களுக்கு நகர்ந்தமையே இதற்கான காரணமாகும். எனினும், தோல் மேலாடைகள், நீர் புகாத உடுப்புவகை, காற்றுப்புகா உடுப்புவகை என்பன தொடர்பாக தாழ்ந்த பயன்பாட்டு வீதம் காணப்பட்டமைக்கு தேவைப்படும் தரத்துடன்

போட்டித்தன்மை கொண்ட விலைகளில் இந்த விடயங்களைத் தயாரிப்பதற்கு இலங்கையில் போதுமான தொழில்நுட்பமும் தேர்ச்சியும் காணப்படாமையே முக்கிய காரணமாகும்.

அனுமதிப்பங்கு முறையானது 2005ஆம் ஆண்டு அளவில் கட்டம் கட்டமாக முழுமையாக அகற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றமையினால் எதிர்காலத்தில் சருவதேச போட்டித்தன்மை மிகத் தீவிரமாகக் காணப்படும். இந்த எதிர்கால அறைகூவலை வெற்றிகரமாக எதிர்கொள்ளுவதற்காக புதிய தொழில்நுட்பத்தில் முதலிட வேண்டியதுடன், உற்பத்தித் திறனை முன்னேற்றுவதற்கு அதனது திறனையும் அதிகரிக்க வேண்டும். மேம்பட்ட தகவல் முறைகள் கைத்தொழிற்றுறை விரைவாக ஈடுபாடுகொள்ள, குறிப்பாக முன்னுரிமைகளையும் வடிவங்களையும் மாற்றியமைக்க உதவும்.

### உணவு, குடிபானம், புகையிலை

உணவு, குடிபானம், புகையிலை துணைத்துறை 9.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 1998இல் தனியார்துறை கைத்தொழில் வளர்ச்சியில் 28 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. இந்த வகையில் துணைத்துறைக்கான உணவு, வெறியக் குடிவகை மற்றும் மென்பானங்கள் போன்றவை உயர் வளர்ச்சி வீதத்தினைப் பதிவுசெய்தன. கோதுமைமா, பதனிடல் பாலுற்பத்திகள், விலங்குத்தீனி, விசுக்கோத்து, இனிப்புக்களும் சுவைப்பண்டங்களும், சீனி மற்றும் பதனிடப்பட்ட இறைச்சி உற்பத்திகள் என்பனவற்றின் அதியுயர் உற்பத்தி மட்டங்களைப் பிரதிபலிக்கும் வகையில் உணவுத் துணைத்துறை மேலும் வளர்ச்சியடைந்தது. அரிசிவிலை அதிகரிப்பின் காரணமாக உணவு தயாரிக்கும் தொழிற்சாலைகளிலிருந்து கோதுமை மாவுக்கேற்பட்ட அதிகரித்த கேள்வியின் காரணமாக கோதுமை மாவின் வெளியீடு உயர்வாக இருந்தது. தரமேம்பாடு, சிறந்த பகிர்ந்தளிப்பு வழிப்படுத்தல்கள் என்பனவற்றின் காரணமாக பாலுற்பத்திக் கைத்தொழில் வளர்ச்சியடைந்தது. அதிகரித்த கேள்வியினை எதிர்கொள்வதற்காக இக் கைத்தொழிலின் சில முன்னணி உற்பத்தியாளர்கள் மூன்று முறை மாற்று உற்பத்திச் செயற்பாட்டினைக் கொண்டிருந்தனர். நாடு பூராவும் விரிவாக்கப்பட்ட சிறியளவிலான கோழிப் பண்ணை காரணமாக விலங்குத் தீனிக்கு அதிகரித்த் கேள்வி காணப்பட்டது. சொக்கலேட்டுக்கள், விசுக்கோத்துக்கள், இனிப்புப் பண்டங்கள், பதனிடப்பட்ட இறைச்சிவகைகள் என்பனவற்றில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உற்பத்திவகைகள் பாவனையாளர்களிடமிருந்து அதிக வரவேற்பைப் பெற்றன. இந்த உற்பத்திகளின் கேள்வி அதிகரிப்புக்கு, விளம்பரங்களும், முன்னேற்ற கரமான பொதிசெய் முறைகளும் காரணங்களாய மைந்தன. இயலளவு விரிவாக்கத்துடன் 1998இல் வெறியக்குடிவகை வெளியீடு 9 சதவீதத்தினால் அதிகரித்தது. 1998இல் பியர் கைத்தொழிலின் இயலளவு விரிவாக்கமானது அதிகரித்த கேள்வியினை ஈடுசெய்யக் கூடியதாக இருந்தது. புதுவகையான வெவ்வேறுபட்ட பியர் வர்க்கங்கள் 1998இல் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றின் விலைகள் அதிகரித்திருந்தபோதும் பியருக்கான கேள்வியில் கணிசமான குறைப்பு காணப்படவில்லை. இலங்கையில் மொத்த வெறியக் குடிவகை நுகர்வில் பியரின் நுகர்வு 10 சதவீதத்திலும் குறைவாக இருக்கின்ற வேளையில், அபிவிருத்தியடைந்த நாடுகளில் இந்த விகிதம் 80 சதவீதமாகும். இது இலங்கையின் பியர் கைத்தொழிலின் உள்ளார்ந்த வளம் பயன்படுத்தப்படாமலிருப்பதை எடுத்துக்காட்டுகின்றது. பியரின் சில்லறை விற்பனை வலையமைப்பினை அதிகரிப்பதற்கு கூடியளவு உரிமங்களை வழங்குவதன் மூலம் இக்கைத்தொழிலின் வளர்ச்சியை மேம்படுத்தலாம்.

குடிபானம் துணைத்துறை 9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து தேயிலை பதனிடல் மற்றும் மென்பான கைத்தொழிலின் வளர்ச்சியினைப் பிரதிபலித்தது. பொருத்தமான காலநிலையும், கவர்ச்சிகரமான விலையும் காணப்பட்டதால், குறிப்பாக வருடத்தின் முன்னரைப் பகுதியில் தேயிலை பதனிடும் கைத்தொழில் நன்மையடைந்தது. மென்பானக் கைத்தொழில் வெளியீடு 29 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பயன்தரு விளம்பர நடவடிக்கைகள், புதிய உற்பத்திகளின் அறிமுகம், நவீன பொதியிடல் முறை என்பன கேள்வியை அதிகரிக்கச் செய்தன. இக் கைத்தொழிலானது உற்பத்தியாக்கம் பகிர்ந்தளிப்பு வலையமைப்பு என்பனவற்றிலும் மேம்பாடுகளைக் கண்டது. பிரதான உற்பத்தியாளர்கள் நாடு பூராவும் பாரிய அளவில் மேம்பட்ட குளிரூட்டி வசதிகளைப் பயன்படுத்தியதோடு பகிர்ந்தளிப்பு வலையமைப்பினை உறுதிப்படுத்துவதற்காகவேண்டி தமது ஊர்தித் தொகுதியினையும் அதிகரித்துக் கொண்டனர். சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக பெருமளவில் கிடைத்த பழங்கள், பதனிடும் புதிய தொழில் நுட்பத்தின் அறிமுகத்தினால் உற்பத்தி இயலளவு விரிவடைந்ததுடன் 1998இல் ஏற்றுமதிச் சந்தைக்கான பழச்சாறு, தகரத்திலடைக்கப்பட்ட பழங்கள், பழப்பாகு என்பனவற்றின் உற்பத்தி அதிகரித்தது. எனினும் போதியளவு களஞ்சிய வசதிகள் இல்லாமை, நல்ல தரமான அளவினதான பழங்கள் போதியளவு கிடைக்கப்பெறாமை, வர்த்தக நோக்காகக்கொண்ட உயர்ந்தரக, தரமான விதை வகைகள் கிடைக்காமை, வேளாண்மைக்கும் கைத்தொழிலுக்குமிடையில் நெருக்கமான ஒருங்கிணைப்பு இன்மை என்பனவற்றின் காரணமாக பழ வர்க்கங்கள் பதனிடும் கைத்தொழிலின் உள்ளார்ந்த வளம் இன்னமும் முழுமையாகப்

பயன்படுத்தபடவில்லை. புகையிலை பதனிடல் கைத்தொழில் தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டிலும் மந்தமான போக்கைக் கொண்டிருந்தது. வெளிநாடுகளிலிருந்து கடத்திவரப்படும் சிகரட்டுக்கள், இக் கைத்தொழிலுக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலாக இருந்துவருகின்றது. மேலும், புகையிலை உற்பத்திகளின் விளம்பரங்களுக்கான சட்டத்தடைகளும், புகையிலையை உபயோகிப்பதனால் உடல் நலத்திற்கு ஏற்படும் தீங்குகளும் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் சிகரட்டுக்களுக்கான கேள்வியைக் குறைத்துள்ளன. 1998இல் சிகரெட்டுக்களின் விற்பனை 3.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் உற்பத்தி 1.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

### இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள்

1998இல் இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் கைத்தொழிலின் வெளியீடு தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து 11 சதவீதத்தினால் அதிகரித்தது. இத்துறையில் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்கள் மற்றும் உள்நாட்டுச் சந்தை சார்ந்த கைத்தொழில்கள் ஆகிய இரண்டும் சிறப்பாக வளர்ச்சியடைந்தன. மருந்தாக்கப் பொருட்கள் உயர்ந்த தரம், உள்நாட்டு உற்பத்திகளின் குறைந்த விலை என்பனவற்றின் காரணமாக உள்நாட்டுக் கைத்தொழிலினை இறக்குமதிகளைவிட அனுகூலமாகப் பேணுவதற்கு உதவின. தூய்மையாக்கிப் பொருட்கள், சவர்க்காரம், ஒப்பனைப் பொருட்கள், பற்பசை போன்ற உற்பத்திகளின் தர மேம்பாடு, சிறப்பான பொதியிடல் முறை மற்றும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் என்பன நுகர்வோரிடமிருந்து அதிகரித்த கேள்வியை உருவாக்கின.

1998இல் கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கமானது தீந்தைகள், மெருகுப்பூச்சு வகைகள், பீவீசீ பொருட்கள் மற்றும் இரசாயன உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றிற்கான கேள்வியினை அதிகரிக்கச் செய்தது. பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் கைத்தொழில், துணைக் கைத்தொழிலொன்றாக வளர்ச்சியடைந்து ஏனைய வளர்ச்சியடையும் கைத்தொழிலுக்கும், வர்த்தகத்துக்கும் தேவையான பொதியிடல் பொருட்களை வழங்கியது. இதற்கு மேலதிகமாக 1998இல் பிளாத்திக்கு தளபாடங்களின் உள்நாட்டு உற்பத்தியும் அதிகரித்தது. இவ்வருடத்தில் ஆயுர்வேத மருந்துவகைகளுக்கான கேள்வியும் தொடர்ந்து அதிகரித்தது.

### ஏனைய உற்பத்திப் பொருட்கள்

உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் வகை 11 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. சருவதேச சந்தையில் விலைப் போட்டியின் மத்தியிலும் முதலீட்டுச்சபை உற்பத்தியாளர்கள் பிரதான கொள்வனவாளர்களுடன் உறுதியான தொடர்புகளைக் கொண்டிருந்தமையினால் மேற்கத்தைய சந்தையில் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய இயலுமாக இருந்தது. 1998இல் உள்நாட்டைச் சார்ந்த கைத்தொழில்கள் குறிப்பாக தளபாட உற்பத்திகள், மென் இயந்திரவியல் உற்பத்திப்பொருட்கள் போன்றவை மேலும் மரத்தின் பற்றாக்குறையும் விலை அதிகரிப்பும் மர உற்பத்திப் பொருட்களுக்குப் பதிலீடாக உருக்கினை

**அட்டவணை 4.3**
**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி**
**(நடைமுறை விலைகளில்)**

| வகை | ரூபா மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1994 | 1995 | 1996 | 1997 | 1998(அ) | 1997 | 1998(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 45,054 | 54,927 | 68,209 | 75,713 | 86,994 | 11.0 | 14.9 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 80,845 | 99,602 | 112,539 | 142,249 | 160,543 | 26.9 | 12.9 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,601 | 1,929 | 2,171 | 2,299 | 2,511 | 5.9 | 9.2 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 4,066 | 4,595 | 5,069 | 5,462 | 5,593 | 7.8 | 2.4 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 34,017 | 38,321 | 46,936 | 50,682 | 59,724 | 8.0 | 17.8 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 14,580 | 16,740 | 18,997 | 21,403 | 23,830 | 12.7 | 11.3 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,909 | 1,736 | 2,248 | 2,439 | 2,841 | 8.5 | 16.5 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 7,122 | 7,977 | 8,807 | 11,327 | 13,241 | 28.6 | 16.9 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 4,083 | 5,271 | 6,183 | 7,324 | 8,137 | 18.5 | 11.1 |
| மொத்தம் | 193,277 | 231,098 | 271,159 | 318,898 | 363,414 | 17.6 | 14.0 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கை முதலீட்டுச் சபை.

அடிப்படையாகக்கொண்ட தளபாடக் கைத்தொழிலுக்கு உதவியாக இருந்தன. இதேபோன்று கட்டட நடவடிக்கைகளிலும் விலை அனுகூலங்கள் நீண்ட பாவனை அழகான தோற்றம் என்பனவற்றின் காரணமாக கதவுகள், யன்னல் சட்டங்கள் மற்றும் வேறாக்கல் போன்ற விடயங்களுக்காக மர உற்பத்திப் பொருட்களுக்குப் பதிலாக அலுமினியத்தின் பாவனை அதிகரித்தது. 1998இல் கட்டடப் பொருட்களின் வெளியீடுகள் 9 சதவீதத்தால் அதிகரித்தன. கட்டட நடவடிக்கைகளின் வளர்ச்சியுடன் மின்னியல் பொருட்களுக்கும், கம்பிகளுக்குமான கேள்வி அதிகரித்தது. அதிகரித்த மட்டத்திலான, அரசாங்க கட்டளைகளை பிரதிபலிக்கும் வகையில் படகுகளின் தயாரிப்பும், படகு பழுதுபார்க்கும் நடவடிக்கைகளும் தொடர்ந்து வளர்ச்சியடைந்தன. எனினும், முன்னைய ஆண்டினைப் போலவே மோட்டார் வாகனங்கள் மற்றும் லொறிகளின் உருவமைப்பு, மின்குமிழ் உற்பத்திகள் என்பனவற்றின் தயாரிப்பு இறக்குமதிப் பொருட்களின் போட்டியின் காரணமாக வீழ்ச்சியடைந்தது.

உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகளின் வெளியீடு 1997இன் 4.4 சதவீதத்திலிருந்து சிறிதளவு கூடுதலாக 5 சதவீதத்தினால் அதிகரித்தது. பட்டைதீட்டிய வைரங்கள், இரத்தினக்கற்கள், வைரங்கள் பதித்த ஆபரணங்கள் மற்றும் சிலவகை மட்பாண்ட உற்பத்திகள் என்பன பசுபிக் ஆசிய பிராந்தியங்களிலிருந்தான கேள்வி குறைவடைந்தமையால், தொடர்ச்சியான வீழ்ச்சியைக் கொண்டிருந்தன. 1998இல் சீமெந்து கொங்கிறீற் வேலைகள், மெருகூட்டப்படாத மட்பாண்ட உற்பத்திப் பொருட்கள், கல்நார்த் தகடுகள், கூரைத் தகடுகள் என்பனவற்றின் உற்பத்திகள் அதிகரித்தன. சீமெந்திற்கான அதிகரித்த கேள்வியினை ஈடுசெய்யும் முகமாக பிரதான சீமெந்து உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை விரிவுபடுத்தினர். கட்டடவாக்க நடவடிக்கைகளின் வளர்ச்சியினால் கூரைத்தகடு, கொங்கிறீற் உற்பத்திகள், களிமண் உற்பத்திகள், சுவர் ஓடுகள், தரை ஓடுகள், பளிங்கு சுவர் ஓடுகள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள் மின்காப்பு உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றிற்கான கேள்வி அதிகரித்தது. புதிய இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மட்பாண்டத் துறையின் உற்பத்தித் திறன் மேம்பட்டது. பிரதேச ரீதியில் விற்பனைகளை மேம்படுத்தியதால் களிமண் ஓடுகளின் உள்நாட்டு விற்பனை அதிகரித்தது. இலங்கையின் தற்போதைய வழங்கல் உலக சந்தை தேவையில் 2 சதவீதத்திற்கும் குறைவான பங்களிப்பை வழங்குகின்றது. வளர்ச்சியடைந்துவரும் போட்டித்தன்மை கொண்ட சந்தையொன்றின் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படல் வேண்டும்.

அச்சிடப்பட்ட பொருட்கள், ஒட்டுத்துண்டுகள், பயிற்சிக் கொப்பிகள், நாட்காட்டிகள் போன்றவற்றின் அதிகரித்த கேள்வியினால் தாளும் தாளுற்பத்திப் பொருட்களும் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைக் காட்டின. செய்திப் பத்திரிகைகளின் வெளியீடு அதிகரித்தமையாலும், புதிய சஞ்சிகைகளின் அறிமுகத்தினாலும் தாளுற்பத்திகளுக்குக் கேள்வி அதிகரித்தது. ஏனைய கைத்தொழில்களின் விரிவாக்கமானது ஒட்டுத்துண்டுகள், மடித்து நெளிவாக்கப்பட்ட அட்டைப்பெட்டிகள் போன்ற பொருட்களுக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்தன. இறக்குமதி செய்யப்பட்ட பயிற்சிக் கொப்பிகளின் நிரம்பல் அதிகரித்தபோதும், தரமேம்பாடு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பயிற்சிக் கொப்பிகளைவிட விலை அனுகூலம் என்பவற்றின் காரணமாக அவற்றின் உற்பத்தி அதிகரித்தது. 1996இல் மரங்கள் மீதான இறக்குமதித் தீர்வை முற்றாக நீக்கப்பட்ட போதும் 1998இல் மரம் மற்றும் மர உற்பத்திக் கைத்தொழில் சிறிதளவான வீழ்ச்சியைக்காட்டியது. உலகச் சந்தையில் அதிகரித்த போட்டியினால் ஏற்றுமதிசார்ந்த உற்பத்தியாளர்கள் இந்த வழிமுறைகளினால் மர உற்பத்திக் கைத்தொழிலில் முழுமையான நன்மையைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை. இவ்வாண்டில் உள்நாட்டு மர உற்பத்திக் கைத்தொழில் மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தபோதும், உள்நாட்டு மூலப்பொருள் தட்டுப்பாட்டினால் இக்கைத்தொழிலின் வளர்ச்சி ஆற்றல் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது.

### அரசதுறைக் கைத்தொழில்கள்

1997இல் 15 சதவீத உற்பத்திக் குறைப்புடன் ஒப்பிடுகையில் 1998இல் அரசதுறைக் கைத்தொழில் வெளியீடு 16 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசதுறைக் கைத்தொழிலின் 90 சதவீதத்திற்கும் மேலாக வகைகூறும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பிலிருந்தே உயர் வளர்ச்சி வீதம் பிரதிபலிக்கப்பட்டது. பெற்றோலியத் தூய்மியின் தடையற்ற செயற்பாடானது

வரைபடம் 4.4
கைத்தொழில் உற்பத்தியில் அரச, தனியார் துறையின் பங்கு



1998இல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 18 சதவீத அதிகரிப்புக்குக் காரணமாகியது. வரையறுக்கப்பட்ட லங்கா சோல்ட் மற்றும் தேசிய தாள் கூட்டுத்தாபனம் தவிர்ந்த ஏனைய அனைத்து அரசதுறைத் தயாரிப்பு நிறுவனங்களும் இவ்வாண்டில் உயர் வெளியீட்டு மட்டங்களைப் பதிவுசெய்துள்ளன. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் அதியுயர் வளர்ச்சி வீதத்தினை (30 சதவீதம்) பதிவுசெய்ததுடன் இதனைத் தொடர்ந்து மர மற்றும் மர உற்பத்திப் பொருட்கள் (23 சதவீதம்), இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் (18 சதவீதம்), உணவு, குடிபானம், புகையிலை (5 சதவீதம்) என்பனவும் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. எனினும் அரசதுறையின் தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் வகையின் உற்பத்தி வகை 23 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1997இல் இறப்பர் உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களில் லேட்டெக்ஸ் சேகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டமையைத் தொடர்ந்து வரையறுக்கப்பட்ட இலங்கை தயாரிப்பு மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தினால் அதிகரித்த அளவிலான மூல இறப்பரைக் கொள்வனவு செய்ய இயலுமாக இருந்தது. இதன் காரணமாக 1998இல் அதனது உற்பத்தியினை 10 சதவீதத்தினால் அதிகரிக்க இயலுமாக இருந்தது. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி 23 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இவ்வாண்டில் வன பரிபாலனத் திணைக்களம் மரம் வெட்டும் நடவடிக்கைகளுக்காக கூடுதலான காட்டுப் பிரதேசங்களை ஒதுக்கியது. 1998இல் செவனகல சீனித் தொழிற்சாலையின் வெளியீடு 16 சதவீதத்தினால் உயர்வடைந்து கரும்பின் அதிகரித்த வழங்கலைப் பிரதிபலித்தது. செவனகல தொழிற்சாலையினால் அறுவடை செய்யப்பட்ட பரப்பு 1997இன் 2,377 எக்டேயர்களிலிருந்து 1998இல் 2,422 எக்டேயர்களுக்கு அதிகரித்த வேளையில் பிழியப்பட்ட கரும்பின் அளவு 169,000 மெற்றிக் தொன்களிலிருந்து 197,000 மெற்றிக் தொன்களுக்கு உயர்வடைந்தது. கிழக்குப் பிரதேசத்தில் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் காரணமாக ஏழு மாதங்களுக்கும் மேலாக உற்பத்தி தடைப்பட்டிருந்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் களஞ்சிய வசதிகள் பெருமளவில் காணப்பட்டமை மற்றும் தடையற்ற உற்பத்தி என்பனவற்றின் காரணமாக 1998இல் வரையறுக்கப்பட்ட இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு ஏறத்தாழ 51 சதவீதத்தினால் அதிகரித்தது. பொசுபேற்றுக்கான அதிகரித்த கேள்வியின்காரணமாக குறிப்பாக உள்நாட்டு விவசாயத் துறையிலிருந்து எழுந்த அதிகரித்த கேள்வியின் முதன்மைக் காரணத்தினால் வரையறுக்கப்பட்ட லங்கா பொசுபேற்று நிறுவனத்தின் வெளியீடு 24 சதவீதத்தினால் அதிகரித்தது.

மோசமான வானிலை நிலைமைகளின் முதன்மைக் காரணத்தினால் வரையறுக்கப்பட்ட லங்கா சோல்ட் நிறுவனத்தின் வெளியீடு 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வாழைச்சேனை ஆலையின் வலு வழங்கலில் காணப்பட்ட தடங்கல், எம்பிலிப்பிட்டிய ஆலையின் பொறிகள் அடிக்கடி செயலிழந்தமை என்பன வற்றின் காரணமாக தேசிய தாள் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி 23 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 4.4**
**அரச துறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண்**

1977=100

| வகை | 1994 | 1995 | 1996 | 1997 | 1998(அ) | சதவீத மாற்றம் 1997 | சதவீத மாற்றம் 1998(அ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 9.3 | 10.2 | 9.2 | 8.6 | 9.4 | (6.2) | 9.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | - | - | - | - | - | | |
| 3. மர, மர உற்பத்திகள் | 22.0 | 26.3 | 31.7 | 34.0 | 41.7 | 7.4 | 22.8 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 187.8 | 173.2 | 152.2 | 136.2 | 104.4 | (10.5) | (23.4) |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 126.3 | 118.0 | 132.0 | 116.8 | 137.7 | (11.5) | 17.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 134.2 | 124.2 | 138.9 | 122.8 | 144.8 | (11.6) | 17.9 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 5.5 | 5.9 | 6.8 | 4.7 | 6.0 | (31.7) | 29.6 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 130.8 | 95.0 | 116.5 | - | - | | |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | - | - | - | | | | |
| எல்லா வகைகளும் | 83.8 | 78.0 | 86.2 | 72.2 | 83.5 | (16.3) | 15.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்தவை | 27.7 | 24.5 | 25.1 | 13.5 | 12.2 | (46.4) | (9.7) |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## 4.3 கூட்டிய பெறுமதியும் இயலளவுப் பயன்பாடும்

இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் செலவில் ஏற்பட்ட குறைப்பின் முதன்மைக் காரணத்தினால் 1998இல் கைத்தொழில் துறையின் கூட்டிய பெறுமதி பெயரளவு நியதிகளில் 15.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வாண்டில் உண்மை நியதிகளில் கூட்டிய பெறுமதி 7.5 சதவீதத்தினால் அதிகரித்தது. உற்பத்தியின் மொத்தப் பெறுமதியின் சதவீதமொன்றாக கூட்டிய பெறுமதி 1998இல் சிறிதளவால் 37.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்கள், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் கூட்டிய பெறுமதி விகிதம் 50 சதவீதத்திற்கும் மேலாகக் காணப்பட்டது. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் வகையில் இது 24 சதவீதமாக இருந்தது. அடிப்படை உலோக உற்பத்திப் பொருட்கள் வகையில் இது 25 சதவீதமாகும். உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள், தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் கூட்டிய பெறுமதி விகிதங்கள் சார்பு ரீதியில் உயர்வாகக் காணப்பட்டன. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் உள்நாட்டு கூட்டிய பெறுமதி 34 சதவீதமாகும். இது கடந்த ஐந்தாண்டுகளாக அதிகரித்து வந்துள்ளது.

முதலீட்டுச் சபையல்லா கைத்தொழில் துறையின் நிறுவப்பட்ட இயலளவு 1998இல் மேலும் 4.0 சதவீதத்தினால் விரிவடைந்தது. உயர் தொழில்நுட்ப ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பொறி கருவிகளின் இறக்குமதித் தீர்வை அகற்றல் மற்றும் தாழ்ந்த தேசிய பாதுகாப்புத் தீர்வை (0.5 சதவீதம்) என்பனவற்றின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் முதலீட்டுச் சபையல்லாக் கைத்தொழில்கள் கணிசமானளவு பொறிகளை இறக்குமதி செய்துள்ளன. முன்னைய ஆண்டினைப் போலவே அதி உயர் இயலளவு விரிவாக்கம் (5.5 சதவீதம்) புடவைகள், ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் வகையிலேயே காணப்பட்டது. பல கைத்தொழில் வகைகளில் நிறுவப்பட்ட இயலளவு இவ்வாண்டில் மேம்பாட்டினைக் காட்டியுள்ளது. உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள் (3.9 சதவீதம்), தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் (4.3 சதவீதம்), இரசாயனம் பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் (2.8 சதவீதம்), உலோகமல்லாக்

**வரைபடம் 4.5**
**கைத்தொழில் உற்பத்தியின் கூட்டப்பட்ட சதவீதப் பெறுமதி - 1998**




**அட்டவணை 4.5**
**கைத்தொழில்களின் கூட்டிய பெறுமதி**
**(நடைமுறை விலைகளில்)**

| வகை | ரூபா மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1994 | 1995 | 1996 | 1997 | 1998(அ) | 1997 | 1998(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 24,373 | 29,507 | 32891 | 35585 | 40452 | 8.2 | 13.7 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 20,660 | 24,859 | 31184 | 40714 | 47494 | 30.6 | 16.7 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,081 | 1,177 | 1250 | 1257 | 1312 | 0.6 | 4.4 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 2,301 | 2,458 | 2580 | 2633 | 2578 | 2.1 | -2.1 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 5,758 | 6,898 | 8957 | 10745 | 14274 | 20.0 | 32.8 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 9,272 | 9,726 | 10537 | 11600 | 12463 | 10.1 | 7.4 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 356 | 347 | 450 | 598 | 710 | 32.9 | 18.7 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 4,344 | 4,547 | 4809 | 5924 | 6779 | 23.2 | 14.4 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 1,838 | 2,319 | 2763 | 3157 | 3426 | 14.3 | 8.5 |
| மொத்தம் | 69,983 | 81,838 | 95,421 | 112,213 | 129,488 | 17.6 | 15.4 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் (3.1 சதவீதம்) என்பனவற்றில் பாரிய மேம்பாடுகள் காணப்பட்டன. 1998இல் கைத்தொழில் துறையின் பொதுவான இயலளவுப் பயன்பாட்டு விகிதம் 84 சதவீதத்தில் மாறாது காணப்பட்டது.

## 4.4. உற்பத்திச் செலவும் இலாபத் தன்மையும் தொழில் நிலையும்

475 முதலீட்டுச் சபையல்லா நிறுவனங்களின் தொழிற்சாலை சராசரி இலாப வீதம் (கைத்தொழில் உற்பத்தியின் தொழிற்சாலைப் பெறுமதியின் சதவீதமொன்றாக இலாபம்) 1997இன் 14.9 சதவீதத்திலிருந்து 1998இல் 12.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உற்பத்திச் செலவின் அதிகரிப்பு மெதுவான வளர்ச்சி அல்லது வெளியீட்டு விலைகளின் வீழ்ச்சி என்பனவே இதற்கான காரணமாகும். முழுமையான நியதிகளில் கூலிகள், வலு, மூலப்பொருட்கள மற்றும் ஏனைய செலவுகள் 1998இல் அதிகரித்தன. மொத்த உற்பத்திச் செலவின் சதவீத மொன்றாக இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட் களின் செலவு 1997இன் 43.0 சதவீதத்திலிருந்து 1998இல் 42.5 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதிக் கட்டளைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவேண்டி பல கழிவுகளை வழங்கவேண்டியிருந்தது. பொருட்கள் சேவைகள் வரிகள் விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மின் கட்டணத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது கைத்தொழில் துறையின் இலாபத் தன்மையினைப் பாதித்துள்ளது. இவ்வாண்டில் பல கைத்தொழில் வகைகளின் இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்தது எனினும் பல கைத்தொழில் வகைகளில் தொழிலாளர் உற்பத்தியாக்க மேம்பாடுகள் உற்பத்தியாக்கத்தில் ஏற்பட்ட அதிகரித்த செலவின் மத்தியிலும் குறைந்தளவு வீழ்ச்சிகள் ஏற்படுவதைத் தவிர்க்க உதவின. புடவைகள், ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் வகையில் (20.7 சதவீதம்) உயர் இலாபத்தன்மை காணப்பட்டது. எனினும், 1997இன் 23.9 சதவீதத்திலும் குறைவாகவே காணப்பட்டது. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்தி வகையில் இலாபத்தன்மை 1997இன் 14.8 சதவீதத்திலிருந்து 1998இல் 9.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் வகையின் இலாபத்தன்மை 1997இன் 10.9 சதவீதத்திலிருந்து 1998இல் 11.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. செலவில் ஏற்பட்ட குறைப்பே இதற்கான காரணமாகும்.

மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமொன்றாக தொழிலாளர் செலவு 1997இன் 11.8 சதவீதத்திலிருந்து 1998இல் 11.6 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. வலுச்செலவு 1997இன் 4.5 சதவீதத்திலிருந்து 1998இல் 4.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்வாண்டில் பெயரளவு நியதிகளில் வலுச்செலவு 24.2 சதவீதத்தினால் அதிகரித்தது. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள், அடிப்படை உலோக உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின்

**அட்டவணை 4.6**

**முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாப விகிதங்கள் (அ)**

| வகை | மொத்த உற்பத்திச் செலவு (ரூ.மில்) | | மொத்த உற்பத்திப் பெறுமதி (ரூ.மில்) | | தொழிற்சாலை இலாப விகிதம் (வீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1997 | 1998 | 1997 | 1998 |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 45,713 | 52,611 | 52,604 | 59,180 | 13.1 | 11.1 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 14,571 | 17,329 | 19,147 | 21,866 | 23.9 | 20.7 |
| 3. மர, மர உற்பத்திகள் | 881 | 977 | 1,011 | 1,097 | 12.9 | 10.9 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 3,080 | 3,372 | 3,457 | 3,810 | 10.9 | 11.5 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 13,078 | 15,377 | 14,828 | 17,067 | 11.8 | 9.9 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 8,903 | 12,043 | 10,450 | 13,292 | 14.8 | 9.4 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,035 | 1,221 | 1,192 | 1,389 | 13.2 | 12.1 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 7,070 | 7,648 | 8,230 | 8,740 | 14.1 | 12.5 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 2,867 | 3,285 | 3,240 | 3,642 | 11.5 | 9.8 |
| மொத்தம் | 97,198 | 113,863 | 114,159 | 130,083 | 14.9 | 12.5 |

(அ) 475 முதலீட்டுச்சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 4.7
முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ)
(மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)

| வகை | உள்நாட்டுச் செலவு (சதவீதம்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வலுவும் எரிபொருளும் | | கூலி | | மூலப்பொருட்கள் | | வட்டி | |
| | 1997 | 1998 | 1997 | 1998 | 1997 | 1998 | 1997 | 1998 |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 2.5 | 2.7 | 9.3 | 9.0 | 41.3 | 41.0 | 2.1 | 1.7 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 4.6 | 4.6 | 16.7 | 16.2 | 15.4 | 16.7 | 2.8 | 2.1 |
| 3. மர, மர உற்பத்திகள் | 8.1 | 8.4 | 17.9 | 18.1 | 36.6 | 37.9 | 4.9 | 3.9 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 2.0 | 2.1 | 12.4 | 12.4 | 14.1 | 13.8 | 5.1 | 4.7 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 3.9 | 4.1 | 12.4 | 12.5 | 31.5 | 29.7 | 3.9 | 3.3 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 16.4 | 16.1 | 16.1 | 15.4 | 20.1 | 20.8 | 4.4 | 4.4 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 7.8 | 7.9 | 10.1 | 10.8 | 34.6 | 33.9 | 4.2 | 3.8 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 2.8 | 3.1 | 9.8 | 10.5 | 22.3 | 21.9 | 4.1 | 3.8 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 4.7 | 4.8 | 12.5 | 11.9 | 38.2 | 39.1 | 3.2 | 2.0 |
| மொத்தம் | 4.5 | 4.7 | 11.8 | 11.6 | 31.7 | 31.4 | 3.0 | 2.5 |

(அ) 475 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மொத்தச் செலவின் முக்கிய மூலமொன்றாக வலு விளங்கியது. உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள் தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் மொத்தச் செலவில் வலுவின் பங்கு குறைவாகக் காணப்பட்டது. செலவில் வட்டிச் செலவின் பங்கு 1997இன் 3.0 சதவீதத்திலிருந்து 1998இல் 2.5 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. எனினும் சில கம்பனிகள் புதிய செயற்திட்டங்களில் முதலீடு செய்வதற்காக சார்பு ரீதியில் உயர்ந்த செலவில் மூலதனத்தைப் பெற்றுக்கொண்டதோடு மொத்த உற்பத்திச் செலவில் வட்டிச் செலவின் பங்கு சார்பு ரீதியில் உயர்வானதாகக் காணப்பட்டது.

## கைத்தொழிலில் தொழிலாளர் உற்பத்தியாக்கம்

இலங்கை மத்திய வங்கியின் கைத்தொழில் உற்பத்தி அளவீடு தொழிலாளர் உற்பத்தியாக்கம் 4.1 சதவீதத்தினால் மேம்பாடடைந்துள்ளமையை எடுத்துக்காட்டியது. அனைத்து முக்கிய கைத்தொழில் வகைகளிலும் அதிகரிப்புக்கள் காணப்பட்டன. தொழிலாளர் உற்பத்தியாக்கத்தினை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழிலாளர்களின் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், பொறிகளின் தரமுயர்த்தல் மேம்பட்ட வேலை நிலைமைகள், மேம்பட்ட முகாமைத்துவம் என்பன தொழிலாளர் உற்பத்தியாக்கத்தினை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளன. உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள் வகை (5.3 சதவீதம்), புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் வகை (3.7 சதவீதம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் வகை (5.0 சதவீதம்), தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் வகை (3.1 சதவீதம்) என்பனவற்றில் தொழிலாளர் உற்பத்தியாக்கம் மேம்பாடடைந்தது.

## கைத்தொழிலில் தொழில் நிலை

1998இல் கைத்தொழில் தொழில்நிலை 10.5 சதவீதத்தினால் அதிகரித்தமையானது முதலீட்டுச் சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லாக் கைத்தொழில்களில்

வரைபடம் 4.6
கைத்தொழிலில் தொழிலாளர் உற்பத்தித் திறன்
(1995=100)




1. உணவு, குடிபானம், புகையிலை.
2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள்.
3. மர, மர உற்பத்திகள்.
4. தாள், தாள் உற்பத்திகள்.
5. இரசாயனம், பெற்றோல், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள்.
6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள்.
7. அடிப்படை உலோக உற்பத்திகள்.
8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள்.
9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள்.
10. மொத்தம்

**அட்டவணை 4.8**
**முதலீட்டுச் சபையல்லா தனியார் துறையில் தொழிலாளர் உற்பத்தித் திறன் குறிகாட்டி (அ)**

| வகை | 1997 | 1998 | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 108.2 | 113.9 | 5.3 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 104.0 | 107.8 | 3.7 |
| 3. மர, மர உற்பத்திகள் | 101.0 | 101.3 | 0.3 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 96.0 | 99.0 | 3.1 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 107.1 | 112.5 | 5.0 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 97.7 | 100.3 | 2.7 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 100.4 | 101.6 | 1.2 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 105.7 | 107.5 | 1.7 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 106.4 | 104.4 | -1.9 |
| மொத்தம் | 101.8 | 106.0 | 4.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 475 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

அதிகரித்த தொழிலாளர் ஈர்ப்பினைப் பிரதிபலிப்பதாக இருந்தது. முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் தொழில்நிலை 14 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் முதலீட்டுச் சபை அல்லாக் கைத்தொழில்களின் தொழில்நிலை 2.7 சதவீதத்தினால் அதிகரித்தது. முதலீட்டுச் சபை மூலங்களின்படி ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் காணப்பட்ட போதிலும் தேவையான தேர்ச்சியினைக் கொண்ட தொழிலாளர்களின் பற்றாக்குறையின் காரணமாக வெற்றிடங்களை நிரப்ப முடியாது காணப்பட்டுள்ளது. இவ்வாண்டில் உற்பத்தியில் தாக்கத்தினை ஏற்படுத்தாத வகையில் சில கைத்தொழில்கள் தமது அமைய ஊழியர்களைக் குறைத்துக்கொள்ள இயலுமாக இருந்துள்ளன. மூலதனச் செறிவு மிக்க புதிய தொழில் நுட்பத்தின் அறிமுகப்படுத்தலானது உற்பத்தியாக்கம் குறைந்த தொழிலாளர்களைக் குறைப்பதற்கு உதவிபுரிந்துள்ளன. மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்கள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் போன்ற கைத்தொழில் வகைகளில் தொழில்நிலை 7 சதவீதத்திற்கு மேலாக அதிகரித்துள்ளது. உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள் (3.4 சதவீதம்), புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் (3.7 சதவீதம்), அடிப்படை உலோக உற்பத்திப் பொருட்கள் (4.5 சதவீதம்) என்பனவற்றிலும் தொழில்நிலை அதிகரிப்புக்கள் காணப்பட்டன. 1998இல் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் வகையின் தொழில் நிலையில் 2.3 சதவீத குறைப்பொன்று காணப்பட்டது.

## 4.5. முதலீடு

### வெளிநாட்டு முதலீடுகள்

ஆசியப் பிராந்தியத்தில் வெளிநாட்டு தனியார் முதலீட்டுக்கான சூழல் மந்தமடைந்து காணப்பட்டது. எனினும், 1998இல் இலங்கை சிறிதளவு உயர்வான வெளிநாட்டு தனியார் முதலீடுகளைக் கவரக்கூடியதாக இருந்தது. வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்புக்கான முக்கிய அரச முகவராண்மையாகக் கருமமாற்றும் இலங்கை முதலீட்டுச் சபை 1998இல் ஐக்கிய அமெரிக்க நாடுகள், இந்தியா, சிங்கப்பூர், சேர்மனி, இத்தாலி, தாய்லாந்து மற்றும் பெல்சியம் ஆகிய நாடுகளில் பல முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. புதிய முதலீட்டு வாய்ப்புக்களைத் தேடி இந்திய வர்த்தக கைத்தொழில் சம்மேளனம், மற்றும்

**அட்டவணை 4.9**
**தனியார் துறைக் கைத்தொழில்களில் தொழில் வாய்ப்பு**

| வகை | 1997 | 1998 | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| (i)முதலீட்டுச் சபையல்லா தனியார்துறை (அ) | | | |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 25,282 | 26,132 | 3.4 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 34,599 | 35,865 | 3.7 |
| 3. மர, மர உற்பத்திகள் | 2,166 | 2,334 | 7.8 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 6,135 | 6,261 | 2.1 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 20,815 | 21,215 | 1.9 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 13,293 | 12,991 | -2.3 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 783 | 818 | 4.5 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 5,968 | 6,538 | 9.6 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 5,624 | 5,590 | -0.6 |
| உப மொத்தம் | 114,665 | 117,744 | 2.7 |
| (ii)முதலீட்டுச் சபை தொழில்முயற்சிகள் | 258,185 | 294,388 | 14.0 |
| மொத்தம் | 372,850 | 412,125 | 10.5 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கை முதலீட்டுச் சபை.

(அ) 475 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

ஆசிய பசுபிக் வர்த்தக சம்மேளனக் கூட்டு என்பன வற்றிலிருந்தான வாணிப தூதுக்குழுக்கள் இலங்கைக்கு வருகைதந்தன. புதிய முதலீட்டு வாய்ப்புக்களைத்தேடி அவுத்திரேலியா, சேர்மனி, சீனா ஆகிய நாடுகளிலிருந்தான சிறப்புத் தூதுக்குழுக்கள் இலங்கைக்கு வருகைதந்தன. முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களில் பெறப்பட்ட முதலீடுகள் 1997இன் ரூ.27,375 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.32,209 மில்லியனுக்கு 17.6 சதவீதத்தினால் அதிகரித்தன.

முன்னைய ஆண்டின் ஒப்புதலளிக்கப்பட்ட 328 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் முதலீட்டுச் சபை 400 புதிய முதலீட்டுச் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த முதலீட்டுக் கடப்பாடு 1997இன் ரூ.73,607 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.158,107 மில்லியனுக்கு அதிகரித்தது. 1998இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் 82 முழுமையாக வெளிநாட்டவருக்குச் சொந்தமாகக் காணப்பட்ட வேளையில் 108 கூட்டு முயற்சிகளாகவும் 210 முழுமையாக உள்நாட்டவர் களுக்குச் சொந்தமானதாகவும் இருந்தன. இந்த செயற்றிட்டங்களில் எதிர்பார்க்கப்படும் தொழில் வாய்ப்பு உருவாக்கம் 92,012 ஆட்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டங்களின் வெளிநாட்டுக்கூறு 1998இல் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த முதலீடுகளின் கிட்டத்தட்ட 72 சதவீதமாகும். அவுத்திரேலியா, சீனா, பிரான்சு, கொங்கொங், யப்பான், கொரியா, நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்பன இந்த முதலீட்டுக்கான மூல நாடுகளாக விளங்கின. 1998இல் ஒப்புதலளிக் கப்பட்ட செயற்றிட்டங்களில் 131 செயற்றிட்டங்கள் புடவைகள், ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் வகையிலும் 34 செயற்றிட்டங்கள் உணவு, குடிபானம், புகையிலை வகையிலும், 25 செயற்றிட்டங்கள் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்தி வகையிலும் காணப்பட்ட வேளை யில், மீதி பணிகள் உட்பட பல்வேறு வகைகளிலும் காணப்பட்டது.

முன்னைய ஆண்டினைப் போலவே ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையும் கணிசமான மேம்பாட்டினைப் பதிவுசெய்தன. 1997இன் ரூ.39,820 மில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டினைக் கொண்ட 185 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 1998இல் ரூ.48,635 மில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டினைக் கொண்ட 229 செயற்றிட்டங்கள் தொடர்பாக முதலீட்டுச் சபை ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டது. வெளிநாட்டுக்கூறு ரூ.25,847 மில்லியன் அல்லது கைச்சாத்திடப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த முதலீட்டின் 53 சதவீதமாகும். 1998இன் இறுதிவரை கைச்சாத்திடப்பட்ட 1,693 செயற்றிட்டங்களில் ரூ.118,207 மில்லியன் முதலீட்டுக் கடன்பாட்டினைக் கொண்ட 927 தொழில் முயற்சிகள் 1998இன் இறுதியில் வர்த்தகத் தொழிற்பாட்டில் ஈடுபட்டிருந்தன. இந்த செயற்றிட்டங்களின் வெளிநாட்டுக்கூறு ரூ.73,836 மில்லியன் அல்லது மொத்த முதலீட்டின் 62 சதவீதம்

**அட்டவணை 4.10**

**முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளில் பெறப்பட்ட முதலீடுகள் (அ)**

| வகைகள் | தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை | | வெளிநாட்டு முதலீடு (ரூ.மில்) | | மொத்த முதலீடு (ஆ) (ரூ.மில்.) | |
|---|---|---|---|---|---|---|
| | 1997(இ) | 1998(ஈ) | 1997(இ) | 1998(ஈ) | 1997(இ) | 1998(ஈ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 92 | 149 | 4,253 | 5,200 | 7,923 | 11,392 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 287 | 386 | 15,456 | 16,819 | 21,843 | 25,021 |
| 3. மர, மர உற்பத்திகள் | 21 | 26 | 514 | 671 | 689 | 935 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 14 | 22 | 438 | 461 | 688 | 649 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 76 | 101 | 5,920 | 7,121 | 7,173 | 9,370 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 48 | 66 | 1,035 | 3,004 | 1,985 | 4,841 |
| 7. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 25 | 35 | 1,185 | 2,832 | 1,817 | 3,616 |
| 8. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 122 | 171 | 4,207 | 5,646 | 6,179 | 8,853 |
| 9. பணிகள் | 300 | 402 | 45,679 | 58,438 | 70,700 | 86,529 |
| மொத்தம் | 985 | 1,385 | 78,687 | 100,232 | 118,997 | 151,206 |

(அ) ஆண்டு இறுதியில் உள்ளவாறு திரண்ட
(ஆ) முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்
(இ) திருத்தப்பட்டது.
(ஈ) தற்காலிகம்

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை

வரைபடம் 4.7
முதலீட்டுச் சபையின் அடையப்பட்ட முதலீடுகள்




என மதிப்பிடப்பட்டுள்ளது. இச் செயற்றிடடங்களின் உள்ளார்ந்த தொழில்வளம் 254,505 ஆட்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1998இன் இறுதியில் கட்டுநாயக்கா ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் 96 செயற்றிட்டங்களும், பியகம ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் 58 செயற்றிட்டங்களும், கொக்கல ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் 11 செயற்றிட்டங்களும், மீரிகம ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் 2 செயற்றிட்டங்களும், மல்வத்த ஏற்றுமதிப பதனிடல் வலயத்தில் 4 செயற்றிட்டங்களும், கண்டி கைத்தொழில் பூங்காவில் 4 செயற்றிட்டங்களும், ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களுக்கு வெளியே 752 தொழில் முயற்சிகளும் காணப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை ஆடைத் துறையில் காணப்பட்டன.

1998இல் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் (பொதுச் சட்டம்) பிரிவு 16இன் கீழ் முதலீட்டுச்சபை 90 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச் செயற்றிட்டங்களுக்கான மொத்த முதலீட்டுக் கடப்பாடு ரூ.5,205 மில்லியனாக விளங்கிய வேளையில் வெளிநாட்டுக்கூறு ரூ.2,645 மில்லியன் அல்லது 50 சதவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் 4,046 ஆட்களுடன் ஒப்பிடுகையில் இச் செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட தொழில் நிலை 3,164 ஆட்களாகும். ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த செயற்றிட்டங்களில் 42 செயற்றிட்டங்கள் முழுமையாகவே வெளிநாட்டவருக்குச் சொந்தமாகக் காணப்பட்ட வேளையில் 47 செயற்றிட்டங்கள் கூட்டுமுயற்சியாகவும், 1 செயற்றிட்டம் முழுமையாகவே உள்நாட்டவருக்குச் சொந்தமாகவும் காணப்பட்டது. முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 16இன்கீழ் 1998 இறுதியில் 397 தொழில் முயற்சிகள் வர்த்தகத் தொழிற்பாட்டில் இருந்தன. இச் செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட மொத்த முதலீடு ரூ.18,416 மில்லியனாகும். இதில் ரூ.9,689 அல்லது 52 சதவீதம் வெளிநாட்டு மூலங்களிலிருந்தானதாகும்.

## உள்நாட்டு முதலீடு

முதலீட்டுச்சபை சட்டத்தின் பிரிவு 17இன்கீழ் 1998இல் ஒப்புதலளிக்கப்பட்ட 400 செயற்றிட்டங்களில் உள்நாட்டு முதலீட்டுக் கடப்பாடு ரூ.44,122 மில்லியன் அல்லது மொத்த முதலீட்டுக் கடப்பாட்டின் 28 சதவீதமாகும். 1998இல் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட செயற்றிட்டங்களில் உள்நாட்டு முதலீடு ரூ.19,787 மில்லியன் அல்லது மொத்த முதலீடுகளில் 40 சதவீதமாகும். 1998 இறுதியில் முதலீட்டுச் சபையின் கீழ் வர்த்தக ரீதியில் தொழிற்பட்ட 927 செயற்றிட்டங்களின் உள்நாட்டு முதலீட்டுப் பங்கு ரூ.44,370 மில்லியன் அல்லது மொத்த முதலீட்டின் 38 சதவீதமாகும். இம் முதலீடுகளின் கணிசமான பாகமொன்று ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களுக்கு

வரைபடம் 4.8
ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபை செயற்றிட்டங்கள்

வரைபடம் 4.8.1
ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்கள்




வரைபடம் 4.8.2
ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீடுகள்



வெளியே அமைந்திருந்த தொழில் முயற்சிகளில் காணப்பட்டன.

1998 இறுதியில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்யப்பட்டிருந்த 1,731 தொழில் முயற்சிகளின் மொத்த முதலீடு ரூ.89,728 மில்லியனாக விளங்கியது. இந்தக் கைத்தொழில்களின் தொழில் வாய்ப்பு வளம் 292,841 ஆட்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது. இந்த முதலீடுகள் முக்கியமாக புடவைகள், ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள், இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள், உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள் மற்றும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றிலேயே காணப்பட்டன.

## 4.6. கைத்தொழில் துறைக்கு கிடைக்கத்தக்கதாக உள்ள கொடுகடன்

வர்த்தக வங்கிகள் மற்றும் நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்கள் என்பனவற்றிலிருந்து கைத்தொழில் துறைக்குக் கிடைக்கத் தக்கதாக இருந்த கொடுகடன் இவ்வாண்டில் அதிகரித்தது. தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி என்பன நேரடிக் கடன்கள் மற்றும் பங்குடைமைப் பங்கேற்பு என்பனவற்றின் வடிவில் தொடர்ந்தும் நீண்டகால கொடுகடன் வசதிகளை வழங்கிய வேளையில் வர்த்தக வங்கிகள் பெரும்பாலும் தொழிற்பாட்டு மூலதனமாக குறுகியகால நிதியியல் வசதிகளை வழங்கின. இதற்கு மேலதிகமாக தேசிய அபிவிருத்தி வங்கி, வெளிநாட்டு வர்த்தக மூலங்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றிலிருந்து கூட்டாகத் திரட்டிய நிதியங்களைப் பயன்படுத்தி 1997இல் தொடக்கிவைக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் செயற்றிட்டத்தின் கீழ் மீள் நிதியிடல் வசதிகளை வழங்கியது.

**அட்டவணை 4.11**
**முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் தொழில் நிலையும் ஏற்றுமதி வருவாய்களும்**

| வகைகள் | தொழில்நிலை (திசெம்பர் முடிவில்) | | மொத்த ஏற்றுமதி வருமானம் (ரூ.மில்) (க.ஏ.பெ.) | |
|---|---|---|---|---|
| | 1997 | 1998(அ) | 1997 | 1998(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 8,625 | 11,699 | 5,653 | 9,333 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 161,321 | 189,395 | 98,203 | 114,721 |
| 3. மர, மர உற்பத்திகள் | 3,147 | 2,723 | 396 | 380 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 1,011 | 871 | 1,144 | 1,133 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 22,319 | 25,699 | 17,260 | 20,300 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 9,709 | 10,920 | 6,496 | 5,657 |
| 7. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 1,681 | 2,503 | 1,685 | 3,424 |
| 8. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 31,563 | 31,538 | 15,143 | 16,649 |
| 9. பணிகள் (ஆ) | 18,809 | 19,033 | 8,908 | 9,884 |
| மொத்தம் | 258,185 | 294,381 | 154,888 | 181,480 |

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானவை.
(ஆ) வரையறுக்கப்பட்ட எயர்லங்கா நீங்கலாக.

1998இல் தேசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியும் இணைந்து கைத்தொழில் துறைக்கு 1997இல் ஒப்பந்தம் வழங்கிய ரூ.15,575 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.22,016 மில்லியன் தொகையிலான நிதியியல் வசதிகளுக்கு ஒப்புதல் வழங்கியிருந்தன. இது 41 சதவீத அதிகரிப்பொன்றாகும். உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள் வகையும் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் வகையும் இந்த நிதியியல் வசதிகளின் பாரிய பங்கொன்றினைப் பெற்றுக்கொண்டன. உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள் வகையில் 439 செயற்றிட்டங்கள் தொடர்பாக ரூ.3,864 மில்லியன்கொண்ட தொகைக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட வேளையில் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் வகையின் 277 செயற்றிட்டங்கள் தொடர்பாக ரூ.2,743 மில்லியன்கொண்ட தொகையொன்றுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. 1997இன் ரூ.25 மில்லியனுக்கு எதிராக இவ்வாண்டின் ஒன்பது மாதங்களில் கைத்தொழில் துறைக்கு வர்த்தக வங்கிகள் ரூ.27 மில்லியன்கொண்ட கொடுகடன் வசதிகளை வழங்கியிருந்தன. 1998இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கைத்தொழில் கொடுகடனின் வளர்ச்சி வீதம் கிட்டத்தட்ட 12 சதவீதமாகக் காணப்பட்டது.

இவ்வாண்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் செயற்றிட்டத்தின்கீழான 1,313 செயற்றிட்டங்கள் தொடர்பாக தேசிய அபிவிருத்தி வங்கி ரூ.1,336 மில்லியன்கொண்ட மீள் நிதியிடலுக்கு ஒப்புதலளித்தது. இதில் உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள் வகையில் 225 செயற்றிட்டங்கள் தொடர்பாக ரூ.263 மில்லியன் கொண்ட தொகைக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட வேளையில் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் வகையின் 127 செயற்றிட்டங்கள் தொடர்பாக ரூ.170 மில்லியன்கொண்ட தொகைக்கும் மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்கள் வகையின் 97 செயற்றிட்டங்கள் தொடர்பாக ரூ.107 மில்லியன் கொண்ட தொகைக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. கடந்த ஆண்டில் ரூ.418

**அட்டவணை 4.12**

**தேசிய அபிவிருத்தி வங்கியினாலும், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினாலும் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட நிதியியல் வசதிகள் - 1998 (அ)**

| வகை | சிறிய நடுத்தர உதவி செயற்றிட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மீள்நிதி | | தேசிய அபிவிருத்தி வங்கி | | | | | | இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | | | | | | முழு மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நேரடி நிதி உதவி | | பங்கு மூலதனம் | | மொத்தம் | | ஒப்புதலளிக் கப்பட்ட கடன்கள் | | பங்கு மூலதனம் | | மொத்தம் | | | |
| | எண். | தொகை (ரூ.பில்.) | எண். | தொகை (ரூ.பில்.) | எண். | தொகை (ரூ.பில்.) | எண். | தொகை (ரூ.பில்.) | எண். | தொகை (ரூ.பில்.) | எண். | தொகை (ரூ.பில்.) | எண். | தொகை (ரூ.பில்.) | எண். | தொகை (ரூ.பில்.) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 225 | 263 | 65 | 1,982 | 1 | 60 | 291 | 2,305 | 148 | 1,559 | - | - | 148 | 1,559 | 439 | 3,864 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 70 | 70 | 52 | 663 | 1 | 75 | 123 | 808 | 66 | 1,039 | - | - | 66 | 1,039 | 189 | 1,847 |
| 3. மர, மர உற்பத்திகள் | 97 | 107 | 41 | 102 | - | - | 138 | 209 | 42 | 50 | - | - | 42 | 50 | 180 | 259 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | - | - | 27 | 499 | - | - | 27 | 499 | 25 | 100 | - | - | 25 | 100 | 52 | 599 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 127 | 170 | 94 | 1,219 | 3 | 530 | 224 | 1,919 | 53 | 824 | - | - | 53 | 824 | 277 | 2,743 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | - | - | 2 | 17 | - | - | 2 | 17 | 13 | 429 | - | - | 13 | 429 | 15 | 446 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | - | - | | | - | - | - | - | 9 | 51 | - | - | 9 | 51 | 9 | 51 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | - | - | - | - | - | - | - | - | 74 | 436 | - | - | 74 | 436 | 74 | 436 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 794 | 726 | 528 | 10,481 | 7 | 564 | 1,329 | 11,771 | - | - | - | - | - | - | 1,329 | 11,771 |
| மொத்தம் | 1,313 | 1,336 | 809 | 14,963 | 12 | 1,229 | 2,134 | 17,528 | 430 | 4,488 | - | - | 430 | 4,488 | 2,564 | 22,016 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) செயற்றிட்ட மற்றும் கருவிகள் நிதிக் கடன்கள் மட்டும்.

மூலங்கள்: இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி.
தேசிய அபிவிருததி வங்கி.

மில்லியன் பங்குடமைப் பங்கேற்பு வழங்கிய 8 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 1998இல் 12 செயற்றிட்டங்களுக்கு ரூ.1,229 மில்லியன் பங்குடமைப் பங்கேற்பினை தேசிய அபிவிருத்தி வங்கி வழங்கியது. இந்த ரூ.1,229 மில்லியனில் ரூ.530 மில்லியன் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு வகைகளைச் சேர்ந்த மூன்று செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்டது. தேசிய அபிவிருத்தி வங்கியின் நேரடியான நிதி உதவியின் பிரதான மூலமாக கைத்தொழில் கடன் காணப்படுகின்றது. ஆண்டுக் காலப்பகுதியில் 809 செயற்றிட்டங்கள் தொடர்பாக தேசிய அபிவிருத்தி வங்கி ரூ.14,963 மில்லியன் பெறுமதியை நேரடி நிதி உதவியாக அனுமதித்தது. இதுதொடர்பாக கடந்த ஆண்டில் 733 செயற் றிட்டங்களுக்கு ரூ.11,647 மில்லியன் அனுமதிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அனுமதிக்கப்பட்ட கடன்களின் அளவு 29 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட வேளையில் அனுமதிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் 10 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த நிதி உதவியில் குறிப்பிடத்தக்களவான ஒரு தொகை உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திவகை மற்றும் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்தி வகையைச் சார்ந்த அதிக எண்ணிக்கையான செயற்றிட்டங்களால் ஈர்க்கப்பட்டது.

1998இல் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் அனுமதிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையும், கடனின் அளவும் கணிசமானளவு அதிகரித்தன. 1997இல் அனுமதிக்கப் பட்ட 337 செயற்றிட்டங்களுக்கான ரூ.1,559 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுக் காலத்தில் 430 செயற்றிட்டங்கள் தொடர்பாக ரூ.4,448 மில்லியன்கள் அனுமதிக்கப்பட்டது. இந்த ரூ.4,448 மில்லியனில், ரூ.1,559 மில்லியன் 148 செயற்றிட்டங்கள் தொடர்பாக உணவு, குடிபானம், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் வகைகளுக்காக அனுமதிக்கப்பட்டதுடன், ரூ.1,039 மில்லியன் 53 செயற்றிட்டங்கள் தொடர்பாக இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருள் வகைகளுக்காக அனுமதிக்கப்பட்டது.

## 4.7. கைத்தொழில் கொள்கை

அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கையின் முக்கிய குறிக்கோள்களாவன உள்நாட்டு கைத்தொழில் தளத்தின் விரிவாக்கம், பன்முகப்படுத்தல் மற்றும் தரமுயர்த்தல், பௌதிக மற்றும் மனித வள மூலவளங்களின் செயற்றிறன்மிக்க முகாமைத்துவம், கிராமிய மற்றும் நகர்ப்புறம் ஆகிய இரு துறைகளிலும் புதிய தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம் ஏற்றுமதி

ஊக்குவிப்பு பிராந்திய மட்டத்தில் கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவித்தல் என்பனவாகும். விரைந்த கைத்தொழில் வளர்ச்சிக்குச் சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளை உருவாக்குதல், தனியார் துறையின் பங்கேற்பினை ஊக்குவித்தல், வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஊக்குவித்தல், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையின் விரிவாக்கத்துக்கு வசதியளித்தல், பிரதேச கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பெறுபேறுகளின் வர்த்தக மயமாக்கலை ஊக்குவித்தல், பாரிய நிறுவனங்களுக்கும் சிறிய நிறுவனங்களுக்கு மிடையில் இணைப்புக்களை மேம்படுத்தல் என்பனவற்றினூடாக இக்குறிக்கோளை எய்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

தீர்வை அமைப்பு முறையினை ஒழுங்குமுறைப் படுத்துவதற்காக சனாதிபதி வர்த்தக மற்றும் தீர்வை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இரண்டு கட்டங்களில் இரண்டு கூட்டு தீர்வை அமைப்பு முறையொன்றுக்கு நகருவதற்காக தற்போதைய தீர்வை வீதங்களைக் குறைப்பதற்கு ஆணைக்குழு விதந்துரைத்தது. ஆணைக்குழுவின் விதந்துரைப்புக்களுக்கு இசைந்து செல்லும் வகையில் 1999ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் 2000ஆம் ஆண்டில் இரண்டு கூட்டு தீர்வை அமைப்பு முறை யொன்றினை ஏற்றுக்கொள்வதற்கு முன்மொழிந்தது. 10, 20 மற்றும் 35 சதவீத தீர்வை வீத முறையினை முறையே 5, 10 மற்றும் 30 சதவீத தீர்வை வீத முறையினால் மாற்றீடு செய்யப்படும். இதன்படி, இறக்குமதி செய்யப்பட்ட கைத்தொழில் மூலப்பொருட்களும் பொறிகளும் 5 சதவீத தீர்வை வீதமொன்றினைக் கொண்டிருக்கும். இவ் வழிமுறையானது உற்பத்திச் செலவினைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு இலங்கையின் உற்பத்திப் பொருட்களின் போட்டித் தன்மையினையும் அதிகரிக்கும்.

சுங்க நிருவாகத்தினை மேம்படுத்துவதற்காக வேண்டி சுங்க கட்டளைச் சட்டம் மற்றும் முறைகளும் செயல்முறைகளும் ஆகியவற்றில் முழுமையான மீளாய்வொன்றினை சனாதிபதி வர்த்தக மற்றும் தீர்வை ஆணைக்குழு விதந்துரைத்துள்ளது. சுங்கத்தின செயற்றிறன் மேம்பாடானது முடிவுப் பொருட்களின் நேரத்துக்கேற்ற ஒப்படைப்பு மற்றும் உலக சந்தையில் போட்டியினை மேம்படுத்துவதற்கு அதிமுக்கியமான மூலப் பொருட்களை இலகுவில் பெற்றுக்கொள்ளவும் உதவிபுரியக் கூடியதாக இருக்கும். இது தொடர்பாக 1999ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமானது சுங்க கட்டளைச் சட்டம் மற்றும் முறைகளினதும் செயல் முறைகளினதும் முழுமையான மீளாய்வு ஒன்றினை மேற்கொள்ளுவதற்காக அரசதுறை தனியார்துறை ஆகிய இரண்டிலிருந்தும் வல்லுனர்களை உள்ளடக்கிய குழுவொன்றினை நியமிப்பதற்கு முன்மொழிந்துள்ளது. ஏற்றுமதியாளர்களுக்கு மேலதிக செலவுகள் இன்றி இலங்கைச் சுங்கம் மற்றும் துறைமுக அதிகார சபையினது பணிபுரியும் நேரத்தை நீடிப்பதற்கும் 1999ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முன்மொழிந்துள்ளது.

கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பல வழிமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. தொலைத் தொடர்புப் பணிகளின் விரிவாக்கம், வலு உருவாக்கம் துறைமுக அபிவிருத்தி, கைத்தொழில் பூங்காக்களும் நகரங்களும் போன்ற உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதோடு இவை கைத்தொழில் முதலீட்டை ஊக்குவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்ச்சிபெற்ற தொழிலாளர் பற்றாக்குறைப் பிரச்சினையை எதிர்கொள்வதற்காக வேண்டி தொழிலில் நுழைவதற்கான பயிற்சி, அவர்களது தொழிலாளர்களைத் தக்க வைத்து தரமுயர்த்தல் மற்றும் தொழில் முயற்சி அடிப்படையிலான பயிற்சியை மேம்படுத்தல் என்பன தொடர்பாக தொழில் தருநர்களை ஊக்குவிப்பதற்கான தேர்ச்சி அபிவிருத்தி நிதியம் ஒன்றை நிறுவுவதற்கு 1999ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முன்மொழிந்துள்ளது. இதற்கு மேலதிகமாக தொழிலாளர் சந்தையை மேலும் நெகிழ்ச்சியுடையதாக மாற்றுவதற்கான வழிமுறைகளும் தேவைப்படுகின்றன. தனியார் முதலீட்டை ஊக்க மிழக்கச் செய்கின்றது என பெரும்பாலும் கருதப்படும் ஏற்கெனவேயுள்ள தொழிற் சட்டங்களில் தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்தலும் இதில் அடங்கும்.

இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களில் பெருமளவு தங்கியிருக்கும் ஏற்றுமதி சார்ந்த ஆடைத் தயாரிப்பாளர்களினால் எதிர்கொள்ளப்படும் சுங்கம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக புடவைகள் மற்றும் தொடர்புடைய மூலப்பொருட்கள் மீதான தீர்வைகள் 1998 வரவு செலவுத் திட்டத்தில் நீக்கப்பட்டன. இதன்படி நெய்யப்பட்ட நூல், நெசவுப் பொருட்கள் மற்றும் சம்பந்தப்பட்ட இடைநிலை மற்றும் மூலதனப் பொருட்களின் இறக்குமதி 1997 நவெம்பரிலிருந்து தீர்வையகற்றப்பட்டது. இவ் வழிமுறையின் சுங்கத்தில் ஏற்படும்தாமதங்கள் கள்ளக் கடத்தல் மற்றும் குறை விலைப்பட்டியலிடல் என்பன இல்லாதொழிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதோடு ஏற்றுமதிக்கான முதன்மை நேரத்தினையும் குறைக்கக் கூடியதாக இருக்கும். உள்நாட்டு ஆடைக் கைத்தொழிலை ஊக்குவிக்குமுகமாக தைக்கப்பட்ட ஆடைகளின் இறக்குமதிகளின்மீது 10 சதவீத சுங்கத்தீர்வை விதிக்கப்பட்ட வேளையில் இக் கைத்தொழில் அதாவது ஆலைகளைப் புதுப்பிப்பதற்கு உதவிபுரிவதற்காகவும் புதிய தொழில் நுட்பங்களை

அறிமுகப்படுத்துவதற்காகவும் புடவைக் கைத்தொழிலுக்கான மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும் தொடக்கி வைக்கப்பட்டது.

## கைத்தொழில் துறைக்கான ஊக்குவிப்புக்கள்

உயர் தொழில்நுட்பத்தினை ஊக்குவிப்பதற்காக வேண்டி 1996இன் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட இறை ஊக்குவிப்புக்கள் 1998இன் வரவு செலவுத் திட்டத்தில் மேலும் இரண்டாண்டுகளுக்கு நீடிக்கப்பட்டன. ரூ.4 மில்லியனை முதலீடு செய்யும் புதிய தொழில் முயற்சிகளுக்கும் ரூ.1 மில்லியனை முதலீடு செய்யும் ஏற்கெனவேயுள்ள தொழில் முயற்சிகளுக்கும் ஒப்புதலளிக்கப்பட்ட பொறிகளின் தீர்வையற்ற இறக்குமதியினை இத் திட்டம் வழங்குவதோடு அதிகரிக்கும் இலாபங்களின்மீது ஐந்து வருட வரி விடுப்பையும் வழங்குகின்றது. சிறிய அளவு கைத்தொழில்கள் உயர் தொழில்நுட்பத்தைக் கைக்கொள்ளுவதை ஊக்குவிக்கும் நோக்கில் ஒப்புதலளிக்கப்பட்ட பொறிகளினதும் கருவிகளினதும் இறக்குமதி தொடர்பான ஆகக்குறைந்த முதலீட்டுத் தேவைப்பாடுகள் 1999 வரவு செலவுத் திட்டத்தில் அகற்றப்பட்டன. எனினும், முதலீட்டு முன்மொழிவுகள் தற்போதைய ஆகக்குறைந்த முதலீட்டு மட்டத்திற்கு மேலாகக் காணப்பட்டால் மட்டுமே வருமான வரிச் சலுகைகள் நீடிக்கப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 1998 இறுதியில் ரூ.10,883 மில்லியன் மொத்த முதலீட்டுக் கடப்பாடுடன் 142 புதிய தொழில் முயற்சிகளுக்கும் ரூ.23,270 மில்லியன் மொத்த முதலீட்டுக் கடப்பாட்டினைக் கொண்ட ஏற்கெனவே உள்ள 378 தொழில் முயற்சிகளுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டன. இக்காலப் பகுதியில் இத்திட்டத்தின்கீழ் ரூ.22,465 மில்லியன் பெறுமதியுடைய பொறிகளும் கருவிகளும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த செயற்றிட்டங்களின் உள்ளார்ந்த தொழில் வாய்ப்பு வளம் 31,771 ஆட்களாகும்.

இரத்தினக்கற்களும் ஆபரணங்களும், மின்னியல் கணனி மென்கலங்களும் ஆடைகளும் போன்ற முன்னணித் துறைகளின் பயிற்சி வசதிகளில் தனியார் துறையின் ஈடுபாட்டை உருவாக்கும் நோக்கில் ஒவ்வொரு பயிற்சி நிறுவனமும் ஆகக்குறைந்தது 300 ஆட்களுக்குப் பயிற்சியளிக்க முன்வருமேயானால் ஐந்து வருட வரி விடுப்பை வழங்குவதற்காக முதலீட்டுச் சபை ஊக்குவிப்புக்களை திருத்துவதற்கு 1999இன் வரவு செலவுத் திட்டம் முன்மொழிந்தது. இத் திருத்தத்திற்கு முன்னர் அத்தகைய பயிற்சி வசதிகளை நிறுவுவதற்காக முதலீட்டுச் சபை 15 சதவீத முன்னுரிமை வரி வீதமொன்றினையும் தீர்வையற்ற வசதிகளையும் வழங்கியது. ஏற்கெனவேயுள்ள பயிற்சி நிறுவனங்களை விரிவாக்கி மேம்படுத்துவதற்கும் புதிய பயிற்சி வசதிகளை நிறுவுவதற்கும் முன்மொழியப்பட்டது. முன்மொழியப்பட்ட பயிற்சி அபிவிருத்தி நிதியமானது தொழில் தருநர்கள் தொழிற் பயிற்சியினை நடாத்துவதற்கு அவர்களது ஊழியர்களை தக்கவைத்து

**அட்டவணை 4.13**

**உயர் தொழில்நுட்ப ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட செயற்றிட்டங்கள் 1998 இறுதியில் உள்ளவாறு (அ)**

| வகை | புதிய | | | ஏற்கெனவேயுள்ள | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | முதலீடு ரூ.மில். | உள்ளார்ந்த தொழில் நிலை | எண்ணிக்கை | முதலீடு ரூ.மில். | உள்ளார்ந்த தொழில் நிலை | எண்ணிக்கை | முதலீடு ரூ.மில். | உள்ளார்ந்த தொழில் நிலை |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 20 | 2,204 | 1,468 | 67 | 6,152 | 3,810 | 87 | 8,356 | 5,278 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 13 | 705 | 1,007 | 40 | 1,832 | 2,640 | 53 | 2,537 | 3,647 |
| 3. மர, மர உற்பத்திகள் | 5 | 220 | 432 | 9 | 203 | 505 | 14 | 423 | 937 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 11 | 664 | 838 | 36 | 1,437 | 1,425 | 47 | 2,101 | 2,263 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 38 | 1,642 | 2,241 | 110 | 5,039 | 5,688 | 148 | 6,681 | 7,929 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 7 | 1,408 | 531 | 9 | 428 | 645 | 16 | 1,836 | 1,176 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 5 | 1,004 | 824 | 15 | 1,044 | 840 | 20 | 2,048 | 1,664 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | | | | | | 0 | 0 | 0 | |
| பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 12 | 665 | 897 | 50 | 2,452 | 2,553 | 62 | 3,117 | 3,450 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 20 | 1,838 | 1,827 | 20 | 689 | 803 | 40 | 2,527 | 2,630 |
| 10. பணிகள் | 11 | 533 | 609 | 22 | 3,994 | 1,574 | 33 | 4,527 | 2,183 |
| மொத்தம் | 142 | 10,883 | 10,674 | 378 | 23,270 | 20,483 | 520 | 34,153 | 31,157 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு.

தரமுயர்த்துவதற்கும் தொழில் முயற்சி அடிப்படையில் பயிற்சியை மேம்படுத்தவும் ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கைத்தொழில் ஆலோசனைக் குழுவின் அபிவிருத்தி மீளாய்வுக் குழுவின் விதந்துரைப்புக்களின் அடிப்படையில் மின்னியல் மற்றும் உடற்கோப்புக்கான மூலகங்கள், மட்பாண்டம் மற்றும் கண்ணாடிப் பொருட்கள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் இலகு மற்றும் பார பொறியியல், இரத்தினக்கற்கள் மற்றும் வைரங்கள் என்பனவற்றின் வெட்டிப்பட்டை தீட்டல் மற்றும் ஆபரணங்களின் தயாரிப்பு என்பன உந்து கைத்தொழில்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. 1998இல் அத்தகைய கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக சிறப்பு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. குறித்துரைக்கப்பட்ட பிரதேசங்களில் ஆகக்குறைந்தது ரூ.50 மில்லியனை முதலீடு செய்து 50 தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி வெளியீட்டில் 90 சதவீதத்தினை ஏற்றுமதி செய்யும் கைத்தொழில்களை நிறுவும் புதிய தொழில் முயற்சிகள் 10 ஆண்டு வரி விடுப்புக்கும் முதலீட்டுச்சபை ஊக்குவிப்புக்களுக்கும் தகைமைபெறுகின்றன. ஏற்கெனவே உந்து கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள முதலீட்டுச் சபையல்லா தொழில் முயற்சிகள் ஏற்கெனவேயுள்ள தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதற்காக தீர்வையற்ற அடிப்படையில் பொறிகருவிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டன. இத் தீர்வையற்ற சலுகைகளுக்கு மேலதிகமாக 5 ஆண்டு காலப்பகுதிக்குள் ஏற்றுமதித் தேவைப்பாட்டின் 50 சதவீதத்தினை எய்தும் தொழில் முயற்சிகளுக்கு 5 ஆண்டு வரிவிடுப்பு வழங்கப்பட்ட வேளையில் 90 சதவீத ஏற்றுமதித் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் தொழில் முயற்சிகளுக்கு 10 ஆண்டு வரிவிடுப்பும் முழுமையாக முதலீட்டுச் சபை தகுதிநிலையும் வழங்கப்படும். மேலும், உந்து கைத்தொழில்களில் தமது வெளிப்படுத்தப்படாத ஒன்றுசேர்ந்த வருமானங்களை முதலீடுசெய்யும் முதலீட்டாளர்கள் வரி/செலாவணிக் கட்டுப்பாட்டு மன்னிப்புக்கான தகைமை பெறுவர் எனப் பிரகடனப் படுத்தப்பட்டது. தங்கம், இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வருமானவரி, தேசிய பாதுகாப்பு வரி என்பன வற்றிலிருந்து விலக்களிப்பு மற்றும் தங்கம் இரத்தினக்கல் என்பனவற்றின் தீர்வையற்ற இறக்குமதி என்பன உட்பட ஏனைய பல ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டன.

1998இல் புடவை இறக்குமதி தாராளமயமாக்கப் பட்டதன் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட புடவைக் கைத்தொழிலின் மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டமானது புதிய தொழில் நுட்பங்களின் அறிமுகப்படுத்தல், செயல்திறனின் அதிகரிப்பு மற்றும் போட்டித் தன்மை என்பனவற்றினை அறிமுகப்படுத்தி உள்நாட்டு புடவை தயாரிப்பாளர்களை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. புடவைத் தயாரிப்பாளர்களின் ஒன்றுசேர்ந்த வட்டியுடன் கூடிய வெளிநின்ற கடன்களை மாற்றல் செய்வதற்காக வேண்டி புடவை கடன்மீட்பு நிதியம் என்ற சிறப்பு நிதியமொன்று நிறுவப்பட்டது. வெளிநின்ற கடன்களை இந்த நிதியத்திற்கு மாற்றல் செய்த பின்னர் முன்னைய கடன்களுக்குப் பிணையாக வைத்த துணைப்பிணை/மற்றும் ஈடு என்பனவற்றிற்கு எதிராக தமது ஆலைகளின் நவீனமயப்படுத்தல் மற்றும் மீளமைப்புக்காக புதிய உதவிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு தொழில் முயற்சிகள் தகைமைபெற்றன. 1998இன் இறுதியில் மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 178 தொழில் முயற்சியாளர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்ததனர். இவற்றுள் 101 விண்ணப்பங்கள் சாதகமாகக் கருத்திற்கொள்ளப்பட்டதோடு வெளிநின்ற மொத்தக் கடன் தொகையான ரூ.3,781 மில்லியன் புடவை கடன் மீட்பு நிதியத்திற்கு மாற்றல் செய்யப பட்டுள்ளது. இந்த 101 தொழில் முயற்சியாளர்களில் ஐந்து ஏற்கெனவே முடிவுபெற்றுள்ளதோடு ஏனையவை செயல்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. புடவைக் கடன்மீட்பு நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டுள்ள கடன்கள் தொடர்பாக அரசாங்கம் ஏற்கெனவே ரூ.204.2 மில்லியனை (முதல் தொகை ரூ.97.6 மில்லியன் வட்டி ரூ.106.7 மில்லியன்) வங்கிகளுக்குச் செலுத்தியுள்ளது. 1998 இறுதியில் தொழில் முயற்சியாளர் ஒருவர் நவீனமயப்படுத்தும் செயற்றிட்டமொன்றை மேற்கொண்டுள்ளதோடு சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஏனையோரும் தமது தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தத் தொடங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. வங்கிகளின் நல்ல வாடிக்கையாளர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள புடவைத் தயாரிப்பாளர்களுக்கு முழுமையான வட்டி உதவிக் கொடுப்பனவு முறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மூலப்பொருட்கள் மற்றும் புடவைக் கைத்தொழிலுக்குத் தேவையான துணைப் பொருட்கள் என்பனவற்றையும் உள்ளடக்கி செயற்றிட்டம் தொடர்பான பொறிகள், கருவிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் உள்ளீடுகள் போன்றவற்றினை தீர்வையற்ற அடிப்படையில் இறக்குமதி செய்வதற்கும் தயாரிப்பாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். சருவதேச சந்தைகளுக்குத் தேவைப்படும் தர நிர்ணயங்களை இவர்களது உற்பத்திப் பொருட்கள் எய்தும்வரை 1999 சனவரியிலிருந்து பள்ளிக்கூட சீருடைகளுக்குத் தேவையான துணி வகைகள், ஆயுதப்படையினருக்குத் தேவையான துணிவகைகள், சுகாதாரத் துறைக்குத் தேவையான

மென்பஞ்சு, காயங்கள் கட்டும் துணி மற்றும் அஞ்சல் மற்றும் புகையிரத திணைக்கள சீருடைகளுக்குத் தேவையான துணிகள் இந்தத் தயாரிப்பாளர் களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இக் கொள்வனவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக அரசாங்க நிறுவனங்களின் துணிவகைத் தேவையினை மதிப்பீடு செய்வதற்கும் அனுமதிப்பங்கு அடிப்படையில் கொள்வனவுக் கட்டளையைப் பெற்றுக்கொள்வதற்கும் தகைமைபெறும் தயாரிப்பாளர்களை இனங்காணுவதற்கு மாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சில் உள்நாட்டு புடவை ஒதுக்கீட்டுக்குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

பிராந்திய கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவிப்பதற்காகவேண்டி கைத்தொழிலின் புவியியற் பரம்பலை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் ஊக்குவிப்புத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, வர்த்தகத் தொழிற்பாட்டில் ஈடுபட்டுள்ள முதலீட்டுச் சபை அல்லது முதலீட்டுச் சபையல்லாத எந்த ஒரு தொழில் முயற்சியும் 1998 திசெம்பர் 31ஆம் நாளுக்கு முன்னர் "கடினமான பிரதேசம்" அல்லது "மிகக் கடினமான பிரதேசம்" எனக் குறித்துரைக்கப் பட்டுள்ள வலயமொன்றில் விரிவாக்கப் பிரிவு ஒன்றை அல்லது மீள்நிறுவலை மேற்கொண்டு ஆகக்குறைந்தது 150 ஆட்களைத் தொழிலில் அமர்த்தி வெளியீட்டில் ஆகக்குறைந்தது 50 சதவீதத்தினை ஏற்றுமதி செய்யுமேயானால் முதலீட்டுச் சபையினால் வழங்கப் படும் ஊக்குவிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையைப் பெறும் ஆடைத் தயாரிப்புத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் ஆகக்குறைந்த ஏற்றுமதித் தேவைப்பாடு 90 சதவீதமாகும். "கடினமான பிரதேசத்தில்" அல்லது "மிகக் கடினமான பிரதேசத்தில்" விரிவாக்க அலகு ஒன்றை நிறுவும் அல்லது மீள் நிறுவும் வர்த்தக தொழிற்பாட்டிலுள்ள தொழில் முயற்சியொன்று ஏனைய முதலீட்டுச்சபை ஊக்குவிப்புக்களுடன் முறையே 5 ஆண்டு 8 ஆண்டு வரி விடுப்புக்கு உரித்துடையதாகும். கடினமான மற்றும் மிகக் கடினமான பிரதேசங்களில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகள் ஆடைத் தயாரிப்பு, துணை உற்பத்திப் பொருட்கள் மற்றும் ஆடைத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றைத் தயாரிப்பதற்காக அதே அமைவிடத்தில் விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் உயர் தொழில் நுட்ப சிறப்பு பயிற்சி நிறுவனங்களை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு அவற்றினை 1998 திசெம்பர் 31ஆம் நாளுக்கு முன்னர் ஆரம்பித்து ஆகக்குறைந்தது 100 ஆட்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குமேயானால் அவற்றிற்கு 5 ஆண்டு மேலதிக வரிவிடுப்பினை வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. 1998இல் இந்த ஊக்குவிப்புத் திட்டம் முடிவடைய இருந்த போதிலும் 1999 வரவு செலவுத் திட்டத்தில் இவ்வூக்குவிப்பு 1999 திசெம்பர் 31வரை நீடிக்கப்பட்டுள்ளது.

### தேசிய உற்பத்தியாக்க தசாப்த நிகழ்ச்சித் திட்டம்

தனியார்துறை, அரசதுறை ஆகிய இரண்டிலும் உற்பத்தியாக்கத்தை மேம்படுத்தும்குறிக்கோளுடன் 1997இல் தொடக்கி வைக்கப்பட்ட தேசிய உற்பத்தியாக்க தசாப்த நிகழ்ச்சித் திட்டம் 1998இலும் தொடர்ந்தது. உற்பத்தியாக்கத்தினை சுற்றுப்புற பிரதேசங்களுக்குக் கொண்டு சென்று அரசதுறையில் உற்பத்தியாக்க மேம்பாட்டை வலியுறுத்தும் நோக்கில் உற்பத்தியாக்க மேம்பாட்டிற்காக ஐந்தாண்டு உற்பத்தியாக்க உபாய திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் நோக்கில் 1998ஆம் ஆண்டு முக்கிய ஆண்டொன்றாகக் கருதப்படுகின்றது. தலைமைத்துவ மேம்பாடு, மனித மூலவள அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி, நிதிப் பயன்பாட்டின் மேம்பாடு, விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் நடவடிக்கை முறைகளில் திருத்தங்களின் அறிமுகம் என்பனவற்றின் ஊடாக அரசதுறை, தனியார் துறை மற்றும் கூட்டுத் துறையில் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதற்கு ஐந்தாண்டுத் திட்டம் நோக்கம் கொண்டுள்ளது. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின்படி, 1999இலிருந்து ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும். ஊழியர்கள் தயாரிப்பாளர்கள் மற்றும் பொது மக்களிடையே தொழிலாளர் பங்கேற்பு நுட்பங்களை பிரபல்யப்படுத்துவதற்கும் உற்பத்தியாக்க கோட்பாடுகளின் புரிந்துணர்வை அதிகரிக்கச் செய்வதிலும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு முக்கிய கவனம் செலுத்தியது. பெரும்பாலும் ஒவ்வொரு அமைச்சிலும் உற்பத்தியாக்கப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளதோடு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசதுறை நிறுவனங்கள் என்பனவற்றில் உற்பத்தியாக்க மேம்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக இணைப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனனர். பொது மக்களுக்கிடையில் உற்பத்தியாக்க மேம்பாட்டுக் கோட்பாடுகள் தொடர்பாக புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்தும் வானொலி கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. 1998இல் 50 ஆங்கில நிகழ்ச்சிகளும் 50 சிங்கள நிகழ்ச்சிகளும் 52 சிறுவர் நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டன.

## 4.8. கைத்தொழில் அமைவிடம்

பல கைத்தொழிலாளர்கள் தமது தொழிற்சாலைகளை கொழும்பு, கம்பகா ஆகிய மாவட்டங்களில் நிறுவுவதற்கே விரும்புகின்றனர். இம் மாவட்டங்களில் சார்பு ரீதியில் சிறந்த உட்கட்டமைப்பு

வசதிகள் கிடைக்கத்தக்கதாக விளங்கியமையும், துறைமுகத்துக்கும் விமான நிலையத்துக்கும் அருகில் காணப்படுகின்றமையுமே இதற்கான காரணமாகும். இம்மாவட்டங்களில் கைத்தொழில்கள் செறிந்து காணப்படுகின்றமையானது தலைநகரின் நெரிசல், கைத்தொழிலுக்கான தொழிலாளர் பற்றாக்குறை, சுற்றாடல் மாசடைதல், உண்மைச் சொத்துக்களின் விலை அதிகரிப்பு என்பனவற்றையும் உள்ளடக்கிய பல பொருளாதார சமூகப் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன. இப் பிரதேசங்களில் கைத்தொழில்களின் மிகையான செறிவினை ஆகக்குறைந்ததாக்குவதற்கும் தொழில் வாய்ப்பு மற்றும் முதலீட்டு நோக்கங்களுக்காக இப்பிரதேசங்களுக்கு மக்கள் இடம்பெயர்வதை ஊக்கமிழக்கச் செய்வதற்காகவும் கடந்த அண்மைய காலத்தில் அரசாங்கம் பல கொள்கை வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்ட முக்கிய நடவடிக்கைகளில் இருநூறு ஆடைத் தொழிற்சாலைகள் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஐம்பது ஆடைத் தொழிற்சாலைகள் நிகழ்ச்சித் திட்டங்களின் அறிமுகம் கண்டி, மல்வத்தை, வத்துப்பிட்டிவல மற்றும் மீரிகம ஆகிய பிரதேசங்களில் சிறிதளவு ஏற்றுமதி பதனிடல் வலயங்கள் மற்றும் பூங்காக்கள் நிறுவப்பட்டமை, பிரதேச கைத்தொழில் பூங்காக்கள் கைத்தொழில் பேட்டைகள் மற்றும் கைத்தொழில் நகர நிகழ்ச்சித் திட்டங்களின் அறிமுகம், தெங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் அறிமுகம் குறித்துரைக்கப்பட்ட கடினமான பிரதேசங்களிலும் மிகக் கடினமான பிரதேசங்களிலும் கைத்தொழில்களை நிறுவுவதற்கான இறை ஊக்குவிப்புக்களின் வழங்கல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப் பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகனின் போதாமையை எதிர்கொள்ளுவதற்காக அரசாங்கம் பிராந்திய கைத்தொழில் பூங்காக்கள் நிகழ்ச்சித் திட்டத்தை தொடங்கிவைத்தது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சீதாவாக்கை கைத்தொழில் பூங்கா 1998இல் அதனது நிருமாண வேலைகளை முற்றுப்பெறச் செய்ததுடன் தொழிற்சாலைக் கட்டடங்கள், செல்வழிகள், மின்சாரம், நீர், தொலைத் தொடர்பு மற்றும் கழிவு அகற்றல் வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்பட்டன. சீதாவாக்கை கைத்தொழில் பூங்காவில் தொழிற்சாலை அமைவிடங்களின் விற்பனை 1998 யூலையில் தொடங்கப்பட்டது. உணவு பதனிடல், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள், ஆடைகள், மின்னியல் மற்றும் மின்னியல் உற்பத்திப் பொருட்கள், மரத் தளபாடங்கள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் மின்னியல் மூலங்களின் உடற்கோப்பு போன்ற சூழலுடன் பெருமளவு நட்புறவுள்ள கைத்தொழில்கள் இப்பூங்காவில் ஊக்குவிக்கப்படும். 300 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட மத்துகம கைத்தொழில் பேட்டையின் நிருமாணம் தொடர்பான பூர்வாங்க அறிக்கை ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது. தென்மாகாணத்தில் படஅத்த என்ற இடத்தில் 105 ஏக்கர் பரப்புடைய அரசாங்க காணியொன்று கழிவு நீர் அகற்றல் பொறி, குருமச் சேர்மான மீட்பு அலகுகள் மற்றும் கடின விரயப் பொருள் அகற்றல் முறை என்பனவற்றை உள்ளடக்கிய தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் தோல் பதனிடல் கைத்தொழிலுக்கான கைத்தொழில் பூங்கா ஒன்றினை நிறைவேற்றுவதற்காக அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்றது.

மல்வத்த, மீரிகம, வத்துபிட்டிவல ஆகிய இடங்களில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளின் வழங்கலுடன் சிறிதளவு ஏற்றுமதி பதனிடல் வலயங்களை நிறுவுவதற்கு முதலீட்டுச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதனது நிருமாண வேலைகள் முற்றுப்பெற்ற பின்னர் மல்வத்தை சிறு ஏற்றுமதிப் பதனிடல் வலயம் 11 கைத்தொழில்களுக்கு இடவசதிகளை வழங்கும். இந்தச் செயற்றிட்டத்தின் தொழில் வாய்ப்பு வளம் 5,000 ஆட்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 40 எக்டேயர்களுக்கு மேலான நிரப்பரப்பைக் கொண்ட மீரிகம சிறு ஏற்றுமதிப் பதனிடல் வலயம் 15 கைத்தொழில் அலகுகளுக்கான இயலளவைக் கொண்டுள்ளது. இப் பூங்காவின் கட்டுமானத்தின் முதலாவது கட்டம் 1999இல் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வத்துப்பிட்டிவல சிறு ஏற்றுமதிப் பதனிடல் வலயம் 20 கைத்தொழில் அமைவிடங்களுக்கான 27 எக்டேயர் நிரப்பரப்பினைக் கொண்டுள்ளது.

பிரதேச கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ஹோமாகம, மினுவன்கொடை, கரன்தெனிய, பெலிஅத்த, பன்னல, உடுகாவ, மாத்தளை, தங்கொடுவ, அம்பாறை, குருவிட்ட, தமன்கடுவ ஆகிய இடங்களில் பன்னிரண்டு கைத்தொழில் பேட்டைகளின் நிருமாண வேலைகள் 1997இலும் 1998இலும் தொடங்கப்பட்டன. இந்தப் பேட்டைகள் 324 ஏக்கர் பரப்பினை உள்ளடக்கியுள்ளதோடு 225 கைத்தொழில் அலகுகளுக்கான அமைவிடங்களைக் கொண்டிருக்கும். 1998 இறுதியில் வாய்ப்புக்களைக் கொண்ட முதலீட்டாளர்களுக்கு 80 காணித்துண்டுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இவ்வமைவிடங்களில் 17 கைத்தொழில் செயற்றிட்டங்கள் வர்த்தக தொழிற்பாட்டில் ஈடுபட்டிருந்ததோடு 3,460 ஆட்கள் தொழிலில் அமர்த்தப்பட்டிருந்தனர். குருநாகல், அநுராதபுரம், நுவரெலியா, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், மொனராகலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் மேலும் 15 கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவது கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித்

திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ள காணிகளின் மொத்தப் பரப்பு 335 ஏக்கர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இக் கைத்தொழில் பேட்டைகளில் எதிர்பார்க்கப்படும் தொழில் வாய்ப்புக்கள் 15,000 ஆட்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. பிரதேசவாரியாக அப்பிரதேசத்துக்கே விசேடமான பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக ஒப்படைப்பு பொருளாதார மையங்கள் பலவற்றினை நிறுவுவதற்கு 1999 வரவு செலவுத் திட்டம் முன்மொழிந்துள்ளது. திவுலப்பிட்டிய மற்றும் தம்புள்ள ஒப்படைப்புப் பொருளாதார மையங்களின் நிருமாண வேலைகள் 1998இல் ஆரம்பிக்கப்பட்டன.

ஆண்டின் இறுதியில் 21 மாவட்டங்களில் இருநூறு ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 160 ஆடைத் தொழிற்சாலைகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. இத் தொழிற்சாலைகளின் அமைவிடங்கள் விரிவான பிரதேச பரம்பலைக் காட்டுகின்றன. அதாவது மொத்தம் 160 தொழிற்சாலைகளில் 138 தொழிற்சாலைகள் அல்லது 86.2 சதவீதமானவை கொழும்பு, கம்பகா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் அமைந்துள்ளன. மொனராகலை, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய கடினமான பிரதேசங்களிலும் தொழிற்சாலைகள் அமைந்திருந்தன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இரத்தினபுரி, அநுராதபுரம் ஆகிய ஒவ்வொரு மாவட்டத்திலும் 15 தொழிற்சாலைகள் அமைந்திருந்த வேளையில் புத்தளம், கண்டி ஆகிய ஒவ்வொரு மாவட்டத்திலும் 12 தொழிற்சாலைகள் காணப்பட்டன. எனினும் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 17 என்பனவற்றின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள 1,274 தொழிற்சாலைகளில் 939 அல்லது 73 சதவீதம் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களில் அமைந்திருந்தன. 1990ஆம் ஆண்டில் கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின்கீழ் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்யப்பட்டிருந்த 1,747 தொழிற்சாலைகளில் 1,511 தொழிற்சாலைகள் இவ்விரு மாவட்டங்களிலுமே காணப்பட்டன.